விலை ரூபா 1-00 ★

# ஈழநாடு
THE EELANADU

மலர் 24 ஆடி 4 றம்ழான் 28 இதழ் 157
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 20-7-82

LIBRARY

## யாழ். பொதுநூலகத்திற்கு ரூ. 30 லட்சம் சேர்ந்துள்ளது

### மேயர் விசுவநாதன் தகவல்

யாழ்ப்பாணம்

வன்செயலால் பாதிக்கப்பட்ட யாழ். பொது நூலகப் புனரமைப்புக்கு இதுவரை முப்பது லட்சம் ரூபா சேர்ந்துள்ளது. வெளிநாடுகளிலும் உள்நாட்டிலுமிருந்து இந்நிதி கிடைத்துள்ளது.

இத்தகவலை யாழ். மாநகர முதல்வர் திரு. இராசா விசுவநாதன் வெளியிட்டார். யாழ், பொதுநூலகநிதிக்கென யாழ், வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று நடைபெற்ற தமிழக ஆஸ்தானநர்த்தகி சுவர்ணமுகியின் நடனநிகழ்ச்சிக்கு யாழ், நகரமுதல்வர் தலைமைவகித்துப்பேசுகையில் இத்தகவலைத் தெரிவித்தார்.

யாழ் மாநகர சபையும் பொதுமக்களும்மேற்கொண்ட முயற்சியினுல் இந்நிதி சேர்ந்துள்ளதாகத் தெரிவித்தமுதல்வர் திரு. விசுவநாதன் இதுவரை யாழ். பொது நூலகத்திற்கு 30 ஆயிரம் நூல்களும் கிடைத்துள்ளதாகச் சொன்னுர். மூன்று மாதங்களில் முதலாவது கட்டவேலை முடியுமென்று மேயர் சொன்னுர்.

எதிர்க்கட்சி முதல்வர் திரு. அமிர்தலிங்கமும் உரையாற்றினுர்.

கடந்த 74ம் ஆண்டு தை மாதம் யாழ். வீரசிங்கம் மண்

(8-ம் பக்கம் பார்க்க)

★ யாழ். மாநகர எல்லைக்கு வெளியே நிகழ்ந்த வன்செயல்:

# தனிநபர் ஆணைக்குழு விசாரணை

# இம்மாத இறுதியில் ஆரம்பம்

## நஷ்டஈடு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட அபிவிருத்திசபைத் தேர்தல் காலமான கடந்த 81-ம் ஆண்டு மே, ஜூன் மாதங்களில் யாழ்ப்பாண மாநகர எல்லைக்கு வெளியே வன்செயல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு வழங்குவது சம்பந்தமான விசாரணைகளை யாழ். அரச அதிபர் திரு. தேவநேசன் நேசையா தலைமையிலான தனிநபர் கமிஷன் இம்மாத இறுதிக்குள் ஆரம்பிக்கவுள்ளது.

நகருக்குவெளியே நஷ்ட ஈடு கோரி ஏற்கனவே 70 பேர் விண்ணப்பித்துள்ளனர்.

புதிதாக எவராவது நஷ்ட ஈடுகோரவிருந்தால் தங்கள் விண்ணப்பங்களைத் தாமதியாது சமூகசேவை உதவிப் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்குமாறு திரு தேவநேசன் நேசையா சகல உதவி அரசாங்க அதிபர்களுக்கும் பணித்துள்ளார்.

இதற்கிடையில்யாழ்மாநகர எல்லைக்குள் வன்செயலால் பாதிக்கப்பட்டவர்களுக்குதிரு. லயனல் பெர்ணுன்டோ விசாரணைக்குழு மேற்கொண்ட மதிப்பீட்டின் அடிப்படையில் தற்போது நஷ்டஈடு வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை 200பேர் அரச அதிபரிடமிருந்து தமக்கான நஷ்டஈட்டுப்பணத்தைப் பெற்றுள்ளனர்இன்னும் 166 பேருக்கு விரைவில் நஷ்டஈட்டுப்பணம் வழங்கப்பட்டதும் யாழ். மாநகருக்கு வெளியிலிருந்து விண்ணப்பபித்தவர்களின் மனுக்கள் மீதான விசாரணைகள் ஆரம்பமாக இருக்கின்றன. [மாஅ]

## யாழ் நூலகநிதிக்கு நோர்வேயில் கொடித்தினம்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் பொது நூல் நிலையப் புனரமைப்புக்கு நிதியுதவிவழங்குவதற்கு நோர்வேயில் நிதிசேர்க்கும் பணியில் நோர்வேயில்உள்ள தமிழர் ஒருங்கிணைப்புக்குழு ஈடுபட்டுள்ளதாம். அடுத்தமாதம் நோர்வேயில் இந்த நிதிக்கான கொடித்தினம் ஒன்றைநடத்த விருப்பதாக நோர்வே தமிழ்ச் சங்கச்செயலாளரான செல்வி மா. விமலாதேவி அறிவிக்கிறுர்

யாழ் பொதுநூலக கொடித்தினம் தமிழிலும் நோர்வேஜிய மொழியிலும் இக்கொடியில் அச்சிடப்பட்டுள்ளதாகவும் இக்கொடித் தினத்தின் மூலம் நோர்வேயில் நிதி சேர்ப்பதற்குப் பலகுழுக்களும் நியமிக்கப் பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வண். நி.)

## சேபால பிணை இடைநிறுத்தம்

[கொழும்பு]

விமானக்கடத்தல் காரர் சேபால எக்கநாயக்காவுக்கு வழங்கப்பட்ட பிணையை மேல் முறையீட்டுநீதிமன்றம்நேற்று

(8-ம் பக்கம் பார்க்க)

## யாழ். கல்விப்பணிப்பாளர் சிவநாதனுக்குப் பதவிஉயர்வு

### சிமியாம்பிள்ளை யாழ் வருகிறுர்

### மன்னுர் பணிப்பாளராக செல்வி ஆறுமுகம்

(யாழ்ப்பாணம்)

வடமாநிலக் கல்விப்பணிப்பாளர் திரு க. சிவநாதன யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, வவனியா, மன்னுர், சிலாபம், புத்தளம் முதலான 6 கல்விப் பிராந்திய கல்விப்பணிப்பாளராகப் பதவிஉயர்வு பெற்றுக் கொழும்பு செல்கிறுர். கல்வி அமைச்சின் அழைப்பை ஏற்றுச் சல்லுய் திரு. சிவநாதன் அடுத்தமாதம் 15ம்திகதிதமது புதிய பதவியை ஏற்பர்.

திரு. சிவநாதன்வடமாநிலக் கல்விப்டணிப்பாவராக இருக்கையில் கிளிநொச்சித்தொகுயிலும் ஊர்காவற்றுறைத் தொகுதியிலும் ஆசிரியர்பற்றுக்குறையைப்பெரிதும் நீக்கினுர் என்பது குறிப்பிடத்தக்கது.

வடமாநிலக் கல்விப்பணிப்பாளராக மன்னுர் கல்விப் பணிப்பாளர் திரு எக்ஸ். சிமியாம்பிள்ளை இடமாற்றம் பெற்றுவருகிறுர்.

யாழ் வேம்படி மகளிர் கல்லூரியின் முன்னுள் அதிபர் செல்வி ஆறுமுகம் மன்னுர் கல்விப் பணிப்பாளராக நியமனம் பெற்றுள்ளார். [அ]

## இன்று 'சிவா' பிறந்ததினம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர்த்தொகுதி எம். பியும் தமிழ்ர் விடுதலைக் கூட்டணித் தலைவருமான திரு. மு. சிவசிதம்பரத்தின் பிறந்த நாள் இன்று இதனையொட்டித் தமிழர் விடுதலைக்கூட்டணி நல்லூர்க்கிளையினர் இன்று காலை 7 மணியிலிருந்து 9 மணிவரை தந்தை செல்வா நினைவாலயவளவில் சிரமதானப்பணிக்கு ஏற்பாடுகள்செய்துள்ளனர். இதனையடுத்து திரு நெல்வேலி முத்துமாரிஅம்மன் கோவிலில் விசேட பூசை யொன்றும் நடைபெறவுள்ளது.

[சிறப்புமலர் உள்ளே]

பளைப்பகுதியில் பீதியும் பதற்றமும்!

## கொலையுண்டவரின் தந்தை அதிர்ச்சியால் மரணமாம்

[பச்சிலைப்பள்ளி]

பளைபகுதிக்கோஷ்டிமோதலில் சோரன்பற்றில் வெட்டப்பட்டுக் கொலையுண்ட கி. கணேஷ் என்பவரது மரணச் செய்தியைக்கேள்வியுற்ற அவரது வயோதிபத்தந்தை அதிர்ச்சயினுல் மரணமடைந்துள்ளதாகத் தெரியவருகிறது.

பளைப்பகுதியில் கடந்த இரு வாரங்களாகக் கோஷ்டிமோதல்கள் இடம்பெற்றுவருவதும் இதனைத்தொடர்ந்து மூவர்கொலை செய்யப்பட்டதும் தீவைப்புச்சம்பவங்கள் இடம்பெற்றதும் தெரிந்ததே.

டளையில் உள்ள சோரன் பற்று, மாசார் பேராலை ஆகிய இடங்களில் கோஷ்டிமோதலினுல் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற முக்கொலைகளை அடுத்து அப்பகுதி பதற்ற நிலையும் பீதியும் தொடர்ந்து நிலவிவருகிறது.

துப்பாக்கிச் சூட்டின்போது இறந்த வங்கியொன்றின்பாதுகாப்பு உத்தியோகத்தரான கணேசானந்தன், வெட்டுக் காயங்களுக்குள்ளாகி இறந்த அவரது தந்தை பொன்னையா, சோரன்பற்றுல் வெட்டப்பட்டு இறந்த இ கணேஷ் ஆகியோரது சடலங்கள் நேற்று திங்கட்கிழமை நண்பகல் பிரேத பரிசோதனைக்காகப் பொலிஸ்பாதுகாப்புடன், இறந்த இடங்களிலிருந்து யாழ். பெரியாஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

இம்மோதல்களின்போது சோரன்பற்றில் வெட்டப்பட்டுக் கொலைசெய்யப்பட்ட இ. கணேஷ் என்பவரின் மரணச் செய்தியைக் கேள்வியுற்ற அவரது வயோதிபத்தந்தையும் அதிர்ச்கியினுல் மரணமடைந்துள்ளார்.

இக்கொலைகளையடுத்து ஞாயிற்றுக்கிழமை இரவும் கொலைசெய்யப்பட்ட கணேசானந்தன் என்பவரது உறவினர் ஒருவரது வீடு மாசாரில் தீயிடப்பட்டதுல் எரிந்து சாம்பராகியதுஎனஅறியப்படுகிறது.

இம்மோதல்கள் இடம்பெற்ற கிராமங்களிலுள்ள சிலரைக்காணவில்லை எனவும் அவர்களை உறவினர்கள்தேடிச் சென்றபோது சிலர் பயத்தினுல் மறைவிடங்களில் மனைவி பிள்ளைகளுடன் மறைந்துஇருக்கக்காணப்பட்டார்கள்எனவும் அறியப்படுகிறது.

இச்சம்பவங்கள் தொடர்பாக எவரும் இதுவரை கைதாகவில்லை. [அ]

## சைவப்பெரியார் குருபூசை 26ந் திகதி

(சுழிபுரம்)

சைவப்பெரியார் ஸ்ரீலஸ்ரீ சிவபாதசுந்தரனுரின் குருபூசை இம்மாதம் 26ம் திகதி திங்கட்கிழமை காலை சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மண்டபத்தில நடைபெறும். நேற்று வெளியாகிய செய்தி தவறு கும்.

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

யாழ்ப்பாணம் பலாலி வீதியில் பல்கலைக்கழகச் சந்திக்கும் திருநெல்வேலிச்சந்திக்குமிடையில் புதிய கிணறு, சுற்றுமதில்களுடன் கூடிய இரண்டரைப் பரப்பு வெற்றுக்காணி முழுதாகவோ பகுதியாகவோ விற்பனைக்குண்டு. தொடர்பு: சேனாதிராஜா, கட்டிடஒப்பந்தகாரர், 5ம் ஒழுங்கை, பிரவுண் வீதி, யாழ்ப்பாணம். 3886

நல்ல நிலையில் இயங்கும் இம்பீறியல் தட்டச்சு (ஆங்கிலம்) இயந்திரம் விற்பனைக்கு உண்டு. கொள்வனவு செய்ய விரும்புபவர் பருத்தித்துறை சென்றல் படமாளிகையில் திரு. கே. இராமநாதன் அவர்களுடன் தொடர்பு கொள்ளவும். 3900

அரியாலையில், கண்டி வீதியிலிருந்து 50 யார் தூரத்தில் 5 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: 366, கண்டி வீதி, அரியாலை. 3920

ஆடி அமாவாசை 20-7-82ல்] அன்று கீரிமலையில் அமைந்திருக்கும் அண்ணாகோப்பிவிளம்பர நிலையத்தில் வெற்றுப் பைக்கட்டுகளைக் கொடுத்து இனாமாகப் பொருட்களைப் பெற்றுக்கொள்ளுங்கள். அண்ணா தொழிலகம், இணுவில். போன். 7412 3925

### பயிற்சி

யாழ் நகரில் வெல்டிங்-வயறிங், மோட்டார் மெக்கானிசம் வகுப்புகளுக்கு The Jaffna Engineering College. J. E C. 33, பருத்தித்துறை வீதி, புகையிரதக் கடவைக்கு அருகில் – புதிய பயிற்சி நெறிகள் ஆரம்பம் 21-07-82 3923

### தவறிவிட்டது

எனது ஸ்கூட்டர் Lambretta Scooter இடதுபக்க மட்காட் சாவகச்சேரிக்கும்—யாழ்ப்பாணத்துக்கு மிடையில் 18-7-82 பகல் தவறிவிட்டது. கண்டெடுத்தோர் தயவுசெய்து எம்முடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். செ. கார்த்தி, முனீஸ்வரன் கராஜ், முனீஸ்வரன் வீதி, யாழ்ப்பாணம். 3921

### அறிவித்தல்

கோண்டாவில்
நெட்டிலிப்பாய்ப்
பிள்ளையார் கோயில்
வருடாந்த
மகாசபைக்கூட்டம்
1982-ம்ஆண்டு ஆகஸ்ட்
மாதம் 4-ம் திகதி
புதன்கிழமை இரவு
7-00 மணிக்கு ஆலய
மண்டபத்தில்
நடைபெறும். மகாசபை
உறுப்பினர்கள்
அனைவரையும் சமுகம்
அளிக்கும்படி
வேண்டுகின்றோம்.
இங்ஙனம்
பரிபாலனசபையினர்
19-07-1982 3922

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க


# பருத்தித்துறை கிழக்குப்பிரதேசத்தை யாழ். நூலக நிதிக்கு

## தனி உதவி அரசு அதிபர் பிரிவாக்கக் கோரிக்கை

(பச்சிலைப்பள்ளி)

பருத்தித்துறை கிழக்குப் பிரதேசத்தினை தனியான உதவி அரசாங்க அதிபர் பிரிவாக்கும்படி பருத்தித்துறை கிழக்கிலுள்ள கிராம அபிவிருத்திச்சங்கள் கிராமோதய சபைகள் கூட்டமாக மகஜர் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளன.

இம் மகஜர் யாழ் அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா, பருத்தித்துறை எம். பி திரு. க. துரைரத்தினம் ஆகியோரிடம் நேரில் கையளிக்கப்பட்டதுடன் யாழ் மாவட்ட அபிவிருத்தி சபைத்தலைவர் திரு. சு நடராசாவுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அம் மகஜரில் பருத்தித்துறை கிழக்குப் பிரதேசம் தனியான உதவி அரசாங்க அதிபர் பிரிவாக்கப்படவேண்டுமென முதலாவது ''மொரகொட கமிஷன்'' சிபார்சு செய்திருந்தது எனவும் அச்சிபார்சுகு பின் யாழ் குடாநாட்டில் சில புதிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் உருவாக்கபபட்டது எனவும் தற்போது பருத்தித்துறை கிழக்கின் ஒரு பகுதி பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்குள்ளும் மற்றப் பகுதி பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குக் கீழும் இருப்பதினால் இப்பகுதி மக்கள் பெரும் நிர்வாகச் சிக்கல் போக்குவரத்துக் கஷ்டம் என்பனவற்றினை எதிர்நோக்க வேண்டி உள்ளது எனவும் உடனடியாக உதவி அரசாங்க அதிபர் பிரிவினை உருவாக்க முடியாவிடில் அதுவரை சுற்று உதவி அரசாங்க அதிபர் அலுவலகமொன்றினையாவது அமைக்கும்படி கோரப்பட்டுள்ளது.


ஏழாலை வடக்கு
அமரர்
சி. கலாநாதனின்
10-வது
நினைவாஞ்சலி

கலா...! கலா...! கலா...!
தமிழ் என்ற
சொல்லுக்கு கலா
தனிமையில் ஓரிடம்
பெற்றாய் நீ கலா
— கலா
சொல்லிலும் செய
லிலும் கலா
கனிவும் கருணையும்
கொண்டாய் நீகலா
— கலா
குருதெய்வம் என்
பாய் நீ கலா
குல, மத பேதங்கள்
அற்றாய் நீ கலா
— கலா
அன்பிலும் அறத்தி
லும் கலா
அணையாத தீபத்
தின் சோதி நீ கலா
— கலா
தன்னலம் இல்லாய்
நீ கலா
தணியாத தாய்
அன்பு கொண்டாய்
நீகலா — கலா
உனக்காக உல
கோர்க்கு உரைக்கும்
உன் அன்னையின்
சாட்சி இது கலா
— கலா.

3912

சீ-நோர் அபிவிருத்தி நிறுவனம்
துறைமுகம்- காரைநகர்

ஏல விற்பனை

கீழே குறிப்பிடப்பட்டிருக்கும் பொருட்கள் 31-7-82 காலை 9-00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்பனைசெய்யப்படும்.

இப்பொருட்களைப் பெற விரும்புவோர் 23-7-82 க்கு மேல் நேரடியாகப் பார்வையிடலாம். பொருட்களின் விபரங்களை உற்பத்தி முகாமையாளரின் பணியகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

விற்பனையில் பெறப்பட்ட பொருட்கள் யாவற்றிற்கும் முழுத்தொகையையும் செலுத்துவதோடு, அன்றைய தினமே பி. ப. 4-00 மணிக்கு முன் பொருட்களை எடுத்துச் செல்ல வேண்டும்.

இந்நிபந்தனைகளுக்கமைய விற்பனவு மூலம் பொருட்களை பெற்றபின் எந்தவித முறைப்பாடுகளும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. ஏல விற்பனை மூலம் பொருட்களைப் பெற்றவர் அன்றைய தினமே பொருட்களை எடுத்துச் செல்லாதுவிடின், மீண்டும் விற்பனை செய்யப்படுவதோடு அப்பணம் திருப்பித்தரப்படமாட்டாது

பொருட்கள்

(1) மரம் அரியும் இயந்திரம் (பாட்டுவாள்)
(2) இன்சுலேடட் பெட்டி (5 தொன்)
(3) சீமெந்து கலவை இயந்திரம்
(4) இரும்புப்பட்டடை மேசை
(5) காற்று அமுக்கி
(6) டீசல் என்ஜின் (ஜி. எம்.)
(7) FORD டீசல் என்ஜின்
(8) ரெனேல்ட் மோட்டார் வாகனம் 01 (பச்சை)
(9) இரும்பு தாங்கி-1000 கலன்
(10) இரும்பு தாங்கி 2500/4000 கலன்
(11) 28' படகு அச்சு
(12) வலை இழுப்பு இயந்திரம்
(13) இரும்பு அரியும் இயந்திரம்
(14) குறுக்குவெட்டு அரியும் மர இயந்திரம்
(15) தண்ணீர் பம்ப்-3''
(16) கழிவு இரும்புத்துண்டுகள்

வர்த்தக அதிகாரி

3924


## சாவகச்சேரியில் நூலகவாரம்!

(பச்சிலைப்பள்ளி)

யாழ். பொதுசன நூலகத்திற்கு நிதி திரட்டும் வகையில் சாவகச்சேரித் தொகுதியில் ''நூலக வாரம்'' ஒன்றினை நடத்துவதற்கு அறவழிப் போராட்டக்குழுவும், சாவகச்சேரி லயன்ஸ் கழகமும் நடவடிக்கை எடுத்துள்ளது.

இந் ''நூலக வாரம்'' ஆகஸ்ட் மாதம் 1ம் திகதி முதல் 7ம் தேதிவரை நடத்தப்படவுள்ளது.

இதற்கான நடவடிக்கையினை லயன்ஸ் கழக தலைவர் சட்டத்தரணி செ. அம்பிகைபாலனும், அறவழிப்போராட்டக்குழு செயலாளர் திரு க. ஜீவகதாசும் மேற்கொண்டு வருகிறார்கள்.

இந்நூலக வாரத்தின்போது சாவகச்சேரித் தொகுதியிலுள்ள பாடசாலைகள், வர்த்தக நிலையங்கள் சமூகசேவை ஸ்தாபனங்கள், பொது மக்களிடமிருந்து பெருந்தொகையான நிதியினைத் திரட்டுவதுடன் நூல்களையும் சேகரிப்பதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது விடயமாக யாழ் மாநகரசபை முதல்வர் திரு. இராஜா விசுவநாதனுடனும் தொடர்பு கொண்டுள்ளார்கள். (க)

## பயிற்சி முகாம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பிலுள்ள மயிலதனை என்னும் கிராமத்தில் வெளிநாட்டுப் பிரதிநிதிகளும் இலங்கையில் உள்ள சமூக சேவை ஸ்தாபனங்களினது பிரதிநிதிகளும் கலந்துகொள்ளும் பயிற்சி முகாமொன்றினை சர்வதேச தொண்டர் சேவை ஸ்தாபனம் ஆரம்பித்துள்ளது.

இப்பயிற்சி முகாமில் கலந்துகொள்ள ஜெர்மனி, லண்டன், சுவீடன், பிரான்ஸ் ஆகிய நாட்டுப் பிரதிநிதிகளும் வந்து சேர்ந்துள்ளார்கள்.

மட்டக்களப்பிலிருந்து 26 மைல்கள் தொலைவில் காணப்படும் மயிலதனை மிகவும் பின் தங்கிய கிராமமாகும்.

பயிற்சி முகாமில் கலந்துகொள்ளும் தொண்டர்கள் சிரமதானம் மூலம் இக் கிராமத்திற்குத் தேவையான வீதி, கிணறு, குளம் ஆகியவற்றினை அமைத்துக்கொடுக்க முன் வந்துள்ளார்கள்.

(பச்சிலை நிரு.)

## கிழக்கில் ஐ. தே. க. புனரமைப்பு

[மட்டக்களப்பு]

பொதுத்தேர்தலை முன்னிட்டு ஐ தே கட்சி கிளைகளை மட்டக்களப்பு மாவட்டம் முழுவதும் புனரமைக்கும் முயற்சியில் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் திரு. கே. டபிள்யு. தேவநாயகம் மேற்கொண்டுவருகிறார்.

கட்சிப்புனரமைப்பு வேலைகள் கல்குடா, பட்டிருப்பு ஆகிய தொகுதிகளில் ஓரளவிற்கு பூர்த்தியடைந்துள்ளதாகவும் அடுத்த வாரத்திலிருந்து மட்டக்களப்பு தொகுதியிலிருந்து கட்சிகிளைப் புனரமைப்பு வேலைகளில் ஈடுபடவிருப்பதாக அவர் தெரிவித்தார்.

## மனனப் போட்டி

(சுழிபுரம்)

அபிராமியந்தாதி மனனப் போட்டியை வருடா வருடம் நடாத்திவரும் வழக்கம்பரை சனசமூக பஜனைச் சபையினர் இவ்வாண்டு நடைபெறும் போட்டியை இம்மாதக் கடைசியில் நடாத்தவுள்ளனர். போட்டி அமைப்பாளர் திரு' மு. தம்பிஐயா இதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றார்.

## சிரமதான மூலம் வீதிபுனரமைப்பு

[மன்னார்]

அடம்பன் – வட்டக்கண்டல் பிரதான வீதி சுமார் 5 மைல் நீளத்திற்கு சிரமதானம் மூலம் புனரமைக்கப்பட்டது.

அடம்பன் பிரதேச சபைத் தலைவர் திரு. எஸ். சௌந்தரநாயகம் தலைமையில் நடைபெற்ற இச்சிரமதான வேலையில் மன்னார் எம். பி திரு. பி. எஸ். சூசைதாசன், மன்னார் மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவர் திரு. பி. எம். செபமாலை மன்னார் அரசாங்க அதிபர் திரு. டி. வாமதேவன் ஆகியோருடன் சுமார் ஆயிரம் தொண்டர்கள் ஈடுபட்டனர்.

இவர்களுடன் இச்சிரமதான வேலைக்கு 50 டிராக்டர்களும் பயன்படுத்தப்பட்டன.

இவ்வீதி சீர்கேடடைந்திருந்ததால் பஸ்சேவை நடத்த முடியாதென மன்னார் சாலையால் அறிவிக்கப்பட்டதையடுத்தே இச்சிரமதான வேலை ஆரம்பிக்கப்பட்டது.

## தையல் பயிற்சி நிலையம்

(மன்னார்)

மன்னார்-தாராபுரம் கிராமத்தில் மாதர் தையல் பயிற்சி நிலையம் ஒன்றை இம்மாதம் 30ம் திகதி மூதூர் எம். பி.யும் மன்னார் மாவட்ட அமைச்சருமான ஜனாப் எம். ஈ எச். மஹ்றூப்பின் பாரியார் திறந்து வைக்கவுள்ளார்.

இதற்கான நடவடிக்கைகளை எருக்கலம்பிட்டி கிராம அபிவிருத்திச்சங்கத் தலைவர் ஜனாப் கே. எம். ரட்ணம் மேற்கொண்டுவருகிறார்.

இத்தையல் பயிற்சி நிலையத்தில் பயிற்சிபெறவென 25 மாதர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

## விஞ்ஞான ஆசிரியர் இல்லையாம்

[புலோலி]

அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாசாலையில் கடந்த மூன்று வருடங்களாக விஞ்ஞானம் கற்பிப்பதற்கு ஆசிரியர் இல்லாமல் இருக்கின்றதாம். அத்துடன் 8ம், 9ம் வகுப்புகளிற்கு கல்வி கற்பதற்கு ஆசிரியர்கள் இல்லாததால் கடந்த மூன்று வருடங்களாக மாணவர்கள் 7ம் வகுப்புடன் வெளியேறித் தூரப் பாடசாலைகளுக்குப் போகவேண்டியிருப்பதாகவும், தெரிவிப்பதுடன் இவ்வித்தியாசாலையின் குறைபாடுகளை நீக்கித் தருமாறு பெற்றோர் கல்வித் திணைக்களத்தைக் கோரியுள்ளார்.

## ரூ. 25,000 ஒதுக்கீடு

(மன்னார்)

கள்ளியடி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைக் கட்டிடங்கள் யாவும் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படும். இதற்கென மன்னார் கல்வி இலாகா 25 ஆயிரம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது

### மணிவாக்கு

மனிதன் அடையக்கூடிய உயர்ந்த பொருள் அறிவு என்பர்; ஆனால் அதுமட்டுமல்ல, அறிவினுள் கலந்த அனுதாபமே உயர்ந்தது.

—தோரோ

# நமது நோக்கு

## சித்த வைத்தியம்

அமெரிக்க ஜனாதிபதி ட்ருமன் ஆட்சிக்காலத்தில் அவருடைய அலுவலக வாசலில் ''The buck stops here'' என்ற விளம்பரப் பலகை காணப்பட்டது.

அமெரிக்க நிர்வாகம் மிகத் துரிதமானதென்று உலக புகழ் பெற்றிருந்த போதும், அன்றைய ஆட்சியில் பல பணிகள் தேங்கிக் கிடந்த காரணத்தால் தாமதங்களுக்கு சாக்குப் போக்குச் சொல்வதும், ஒருவர் பொறுப்பை மற்றொருவரில் தட்டிக் கழிப்பதும் கண்டிப்பாக அகற்றவேண்டிய அவசியத்தைஉணர்ந்து ஜனாதிபதி தீவிரமான நடவடிக்கைகள் எடுத்தாரென்று அறிவிக்கப்பட்டது.

அமெரிக்காவின் வரலாறு இத்தகையதென்றால் எங்கள் நாட்டைப்பற்றி என்ன சொல்லலாம்?

அமைச்சுகளின் வேலைகளைக் கவனித்தால், அமைச்சர்களின் பேச்சுக்களை கருத்தில் கொண்டால் ஒருவர் இன்னொருவரில் பொறுப்பைச் சுமத்தி சுணக்கத்துக்கு விளக்கம் கொடுப்பது சர்வசாதாரணம். இதொரு தேசிய பொழுதுபோக்கென்றுகூட கருதப்படுகிறது.

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பிரிவுக்குச் சித்த வைத்தியத் துறையில் அக்கறையில்லையென்று பொறுப்புமிக்க எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் அண்மையில் நடைபெற்ற அபிவிருத்திச் சபைக்கூட்டத்தில் பேசியிருக்கிறார்.

யாழ். மருத்துவபீடம் இதனை 'ஆம்' என்று உடனடியாக ஒத்துக்கொள்ளுமென்று நாம் நம்பவில்லை. மருத்துவபீடம் – பாபம் – என் செயும்: ''அதற்குரிய வசதிகளைப் பாராளுமன்றம் மூலம் எம். பிக்கள் செய்து கொடுக்கவேண்டும். எம். பிக்கள் மூலம் அரசு சுதேச வைத்தியக் கொள்கையைத் துரிதப்படுத்தி அதற்கு வேண்டிய ஆராய்ச்சிப்பகுதிக்கு ஆவன செய்யாவிட்டால் யாழ். மருத்துவபீடம் தானாக எதனைச் சாதிக்கலாம்'' என்று கைவிரிப்பார்கள்.

இந்த வகையில் தேசிய அபிவிருத்தித்துறைகளில் (passing the buck ஒரு பாரம்பரியமான உத்தியென்றே கொள்ளவேண்டும்.

'சிங்களம் மட்டும்' என்றவுடன் 'தமிழ் எங்கள் உயிரெ'ன்பதும்' பௌத்த மறுமலர்ச்சி' என்றதும் அகில இந்து மாநாடும் உலகில் முற்தோன்றிய மொழிகளில் தமிழ் முன்னணி மொழி என்பதும்; சைவசித்தாந்தமே மக்கள் பண்பாட்டுக்கு ஆதியில் வழிவகுத்ததென்பதும், விஞ்ஞானத்துறையிலே ஆகாயவிமானம் ராமாயண காலத்தில் உபயோகத்தில் இருந்ததென்பதும், வைத்தியத்தில் சித்தவைத்தியமே அனாதியென்பதும், அகில உலக மாநாடுகள் கூடிப் பேசப்படும் பெரு விடயங்கள்.

எங்கள் இன்றைய வாழ்க்கையில் இவற்றுள் எத்தனை அம்சங்கள், என்ன நிலையில் இருக்கின்றன என்பது வெட்கத்துக்குரியதென்பதை யார் ஆட்சேபிக்கமுடியும்? பாரதியார் நூற்றாண்டு நிறைவு விழாக்களில் 'மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் சொல்வதில் மகிமை' தேடுகின்றோம்.

சைவர்கள் வழிபடும் சிவபெருமானுக்கே வைத்திய நாதன் என்ற பெயர், மனிதனைப் படைத்த கடவுள் அவனுக்குத் தேவையானவை அவன் சுற்றாடலிலேயே படைத்திருக்கிறான்: கடவுள் நம்பிக்கையில்லாதவரும் விஞ்ஞான, அனுபவ ரீதியில் இதனை ஏற்றுக் கொள்வார். இயற்கையை மறுக்க எவரும் துணிவதில்லை.

இந்த அடிப்படையில் உருவான சிங்கள மக்கள் கைக்கொள்ளும் ஆயுர்வேதமும், தமிழர்களின் சித்தவைத்தியமும் சிறந்த மருந்துவகைகளைக் கையாண்டுவந்தன.

அரசியல் மாற்றம் சுதேச வாழ்க்கைமுறைக்கு ஏற்பட்ட கெடுதி–இவை காரணமாகத் தேசத்தின் மொழிகள் வைத்தியமுறைகள் நடை உடை பாவனை யாவும் ஒரு சுதந்திர நாட்டின் இலட்சியத்துக்கமைய முன்னேறவில்லை.

இந்த நிலைமாறி சுதேச வைத்தியத்தின் பெருவெற்றிகளை அடிப்படையாகக் கொண்ட மருத்துவ முறைகளை மேனாட்டு முறைகளுடன் ஒப்பிட்டு, இணைக்க வேண்டிய பணியை ஆராய்ச்சிமூலம் அறிந்து இதனை வளர்ப்பது மிகமிக முக்கியமானது.

மேனாட்டு மருந்துகளின் விலை அசுர வேகத்தில் உயர்ந்துவிட்டது மட்டும்தான் காரணமல்ல; அது இந்தப் பணியை ஊக்குவிக்கும் ஒரு திடீர் நிகழ்ச்சியாயிருக்கலாம்.

இந்நாட்டில் வாழும் மக்களுக்கு குறிப்பிட்ட சுற்றாடலில் வாழும் மக்களுக்கு தன்னிறைவு காணும் வசதிகள் சுற்றாடலிலே உண்டு. இந்த உண்மையை உரைகல்லாகக் கொண்டு இங்கு மூலிகைவகைகள், உணவுப் பொருட்கள் நன்குவளர்ந்து வரும் மேனாட்டு வைத்திய முறைக்கு ஆதாரமாகஅதன் விஞ்ஞான ஆராய்ச்சி பரிசோதனை முறைகளைப்பயன்படுத்தி ஒரு தகுதியான இணைப்பு முறையைவிருத்தி செய்ய மருத்துவ பீடங்கள் தயாராக வேண்டும். நவசீனாவின் மகத்தான வெற்றிகள் உலகறிந்த விடயம்.

பொதுமக்கள் நம்பிக்கை இவ்வித ஆராய்ச்சியில் அதிகரிக்குமானால் நாடெங்கும், ஆயுர்வேதமும், சித்த வைத்தியமும் பரந்துபட்டு வளர வழி கிடைக்கும்.

போன வழி இலகுவான வழியென்றும், பல மூட நம்பிக்கைகள் மக்கள் வாழ்வில் புகுந்திருப்பதாலும் அவற்றைப் பயன்படுத்தி இந்த மகத்தான வைத்தியமுறை முன்னேற விடாதிருப்பது தேசத் துரோகமாகும்.

ஒரு சுதந்திர நாடு அதற்குரிய ஆராய்ச்சிகளுக்கு மேனாட்டுஆய்வு கூடங்களில் எவ்வளவு காலம் தங்கியிருப்பது?

### யாழ்ப்பாணத்துப் பொதுசன நூல் நிலையம் (1)

# கொட்டிலில் தவழ்ந்துமாடிக் கட்டிடத்தில்ஒளிவீசியவரலாறு

[யாழ்ப்பாணப் பொதுசன நூலகத்தை ஆரம்பித்த அச்சுவேலியூர் க. மு. செல்லப்பா அவர்களுக்கு அணுக்கத் தொண்டராய் ஆரம்பகாலத்து முன்னோடிகளுள் ஒருவராய் உதவி ஒத்தாசை புரிந்த க. சி. குலரத்தினம் அவர்கள் ஐம்பது ஆண்டுஅனுபவத்தை இத்தொடர் கட்டுரைகளில் விபரிக்கின்றார். கட்டுரைகள் தொடர்ந்து வெளிவரும் ஆ. ர்.]

யாழ்ப்பாணத்துப் பொதுசன நூல் நிலையம் தனது பொன்விழாப் பொலிவை 11-12-1983இல் காணுதல் வேண்டும். அது 11-11-1933ல் உதயமாக ஒரு கொட்டிலில் தவழ்ந்து ஒருகடையில் எடுத்தடிவைத்து இன்னொரு கடையில் சிறு நடை நடந்து ஒரு வீட்டின் மாடியில் ஓடியாடித் திரிந்து ஓர் அழகிய மாடிக் கட்டடத்தில் ஒளி வீசி உலகப் புகழ் பெற்றது. சென்ற வருடம் தீவாய்ப்பட்டது.

## யாழ்ப்பாணத்து முதல் நூல்நிலையம்

பொதுமக்கள் நூல்நிலையம் என்னும் பெயரோடு முதன் முதலாக யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பெற்ற நூலகம் இன்று நிலைத்திருந்தால் அதற்கு வயது 140 ஆகும். அது 1842 ஆம் ஆண்டில் பெரிய நீதிமன்றத்துக் காரியதரிசியாயிருந்த எஃப். ஸி. கிறினியர் என்னும் பெரியாரால் ஆரம்பிக்கப்பெற்றது. அதை நூலகம் என்பதிலும் பார்க்க வாசகசாலை என வழங்குதல் பொருத்தமாகும்.

கிறினியர் ஆரம்பித்த நூல் நிலையத்தைவிட வேறொரு நூலகம் நீதிமன்றத்துள் சட்டத்தரணிகளின் உபயோகத்துக்காக நடைபெற்று வந்தது. மாட்சிமை தங்கிய ஜனாதிபதி அவர்களின் தந்தையார் ஒருவேளை அந்த நூல் நிலையத்தைப் பயன்படுத்தியிருக்கலாம். அது பொதுசன நூலகம் அல்ல. கிறினியர் ஆரம்பித்த நூல் நிலையம் பெருமளவில் பயன்படுத்தப்படவில்லை. படித்தவர்கள் பெரியவர்கள் ஒருசிலர் அதனை ஒரு சில வேளைகளிற் பயன்படுத்தி வந்தார்கள். அது நாளடைவில் உருக்குலைந்து போயிற்று.

## இன்றைய நூலகத்தின் உற்பத்தி

அச்சுவேலி ஊரைச் சேர்ந்த க. மு செல்லப்பா என்பவர், யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தின் சக்கடத்தார் என்னும் காரியதரிசிப் பதவியிலிருந்தவர். அவர் கந்தர் மடத்துச் சந்திக்கு மேற்கில் உள்ள குத்தகைக்காரன் வளவு என்னும் மனையில் வாடகை கொடுத்து வாழ்ந்து வந்தவர்.

அக்காலத்தில் கந்தமடத்தில் முன்னேற்றத்து முதல் நூற்றுவர் சழ்கம் ஒன்று நிலவியது (The Progressive Hundred.) நூற்றுவர் கழகத்து இளைஞர்களுக்கு வாசிக்கும் பழக்கத்தைப் பழக்கிய பெரியார் செல்லப்பா அவர்கள் சில காலஞ்செல்ல, நீதிமன்றத்துச்கு அண்மையிலேயே லங்கா ஹோம் என்னும் மனையில் வாழ்ந்தவர்.

லங்கா ஹோம் மனையிலிருந்து அவர் 11-12-19 3 ஆம் நாளில் தமிழர் தேசிய அச்சகத்தில் அச்சிட்டு வெளியிட்ட விண்ணப்பப்பத்திரம் தமிழிலும் ஆங்கிலத்திலும் உலாவியது. 'யாழ்ப்பாணத்துக்கு ஒரு மத்திய இலவச தமிழ் வாசிகசாலையும் நூற்கழகமும்' என்பதே தமிழ்த் தலைப்பு. 'A Central Free Tamil Library in Jaffna' என்பதே ஆங்கிலத் தலைப்பு. செல்லப்பா அவர்கள் வாசிப்பதன் அருமை பெருமையை விளக்கிப் பொதுமக்களிடம் நிதி சேர்ப்பதற்கு விண்ணப்பித்த படிவங்களில் தமது விடுதி விலாசத்தையும், உத்தியோக விலாசத்தையும் தெளிவாகக் குறிப்பிட்டுத் துலாம்பரமாகத் தமது கையொப்பத்தையும் கறுப்பு மையால் எழுதியிருந்தார். செல்லப்பா அவர்கள் விடுத்த விண்ணப்பத்தின் முன்னோடியாக அவர் இந்துசாதனம் என்னும் பத்திரிகையிலும், சிலோன் பிறீபிறெஸ் என்னும் பத்திரிகையிலும் விளம்பர வடிவில் விண்ணப்பித்திருந்தார்.

அவர் பரந்த மனப்பான்மையோடு யாழ்ப்பாணத்துக்கு அப்பால் கொழும்பு, கண்டி, மட்டக்களப்பு, திருக்கோணமலை, மன்னார், முல்லைத்தீவு முதலிய இடங்களில் எங்கெங்கே தமிழர் வாழ்கின்றார்களோ அவர்களை எல்லாம் தங்களால் இயன்றளவு பத்தோ, ஐந்தோ, இரண்டோ, இன்னும் குறையவோ, கூடவோ உடனடியாகவோ, தவணைப்பணமாகவோ தந்துதவுமாறு வெகுஉருக்கமாக வேண்டிநின்றார்.

சிறந்த நிர்வாகியாகிய செல்லப்பா அவர்கள், பற்பல தொழிலாளர்களை அவரவர் தொழிற்சங்க அடிப்படையில் ஒன்றுதிரண்டு பணந்திரட்டியுதவுமாறு ஆசிரியர்கள், எழுதுவினைஞர், தலைமைக்காரர், வர்த்தகர், ஒய்வூதியக்காரர் முதலானோரை வம்மின்கள், வம்மின்கள் என்று வரவழைத்தார்.

(7-ம் பக்கம் பார்க்க)

# நல்வாழ்வுக்கு ஆசிபெற ஆடி அமாவாசை

தந்தை தாய் பேண் என்பது தமிழ்த்தாய்வாக்கு இதே போல தாய் தந்தையரைப் பார்த்தும் மகன் மகள்களை பேணி வளர்க்கஎன்று ஔவை கூறுமையை நோக்கலாம். வயது முதிர்ந்த காலத்திலும் அவர்கள் மறைந்த பின்னரும் தாய். தந்தையர் செய்த நன்றியை மறக்காது பிள்ளைகளாயுள்ளோர் கடமை செய்வது வற்புறுத்தவேண்டும் என்பதை ஔவையாரே சமூகத்தில் கவனித்திருந்தார். இக்காலத்தில்கூட வயோதிபரைக் கௌரவிக்கவேண்டும் என்பதை வற்புறுத்தும் கட்டம் ஏற்பட்டுள்ளதைக்காணலாம்.

தாய், தந்தையர் இல்லாத காலத்தில் அவர்கள்நினைவாக மாதந்தாறும் செய்யப்படும் நன்றிக்கடனே அமாவாசை, பூரணை என்னும் விரதங்களாம். இவ் விரதங்களோடு 96 நாட்கள் பிதிர்கடன்செய்யவேண்டும் என்று தர்மசாத்திரங்கள் கூறுகின்றன.

தாய் தந்தையரைக்குறித்து செய்யப்படும் அமாவாசை பூரணை முதலிய விரதங்களால் தாய் தந்தையரின் ஆன்மாக்கள் இன்புறுவது மட்டுமன்றி தம் கடமை செய்பவர்களாகிய பிள்ளைகளுக்கு நல்வாழ்வுக்கு வாய்ப்பு உண்டாவதுமட்டுமன்றி, நவக்கிரகங்கள் திக்குப்பாலகர்கள் போல உலக இயக்கத்திற்கு பொறுப்பாளர்களாயுள்ள ''பிதிரர்'' என்னும் உலக பரிபாலகர்களுக்கும், திருப்தியேற்படுகின்றது என்பர். அமாவாசை முதலியவிரதங்களை அனுட்டித்து தர்ப்பணம் [எள், நீர்சமர்ப்பித்தல்] செய்தல்மூலம் பிதிர்களைத் திருப்திப்படுத்தாவிட்டால் பிதிர்களுடைய சாபத்திற்கு ஆளாகவேண்டும். பிதிரர்களுடைய சாபத்தினால் வம்சவிருத்தி இல்லாமற் போவது அல்லது பிறக்கும் பிள்ளைகள் குறைவுடையவர்களாய் அமைவது என்பன ஏற்படும். பல குடும்பங்களில் நீண்டகாலம் பிள்ளைப் பேறில்லாதிருப்பவர்களே சிறப்பற்ற பிள்ளைகளையுடையோர் பிதிரர்களுக்கு மகிழ்ச்சியை உண்டாதற்காக விஷசசாந்தி செய்யவேண்டியேற்படுவதைக் காணலாம்.

வருடத்தில் 96 நாட்கள் செய்யவேண்டும் எனச் சொல்லப்பட்டுள்ள கடமை இக்காலத்தில் 4 நாட்களாகக் குறுகிவிட்டது. தாய் தந்தையரின் திவசதினமும் ஆடி அமாவாசை சித்திரைப் பறுவம் என்பனவே இக் காலத்தில் நடைமுறையில் உள்ளது.

இந்த நான்கு நாட்களுள் ஆடி அமாவசை நம் நாட்டிலுள்ளவர்கள் மிகப் புனிதமாகவும் பூரணமாகவும் அனுட்டிக்கும் அமைப்புடனுள்ளது மறைந்த தந்தைக்கு நன்றிசெய்வதுன் நாம் உலகில் பிறப்பதற்க் காரணமாயும் நம் நல் வாழ்விற்கு ஆசி வழங்கக்கூடியவருமான பிதிரர்களை திருப்தி செய்யலாம்.

ஆடிமாசத்துடன் தக்ஷிணாயனம் ஆரம்பித்தலால் தக்ஷிணாயணத்து முதலாவது அமாவாசையாக அமையும் சிறப்பால் முதன்மையுறும் ஆடி அமாவாசை பிதிரர்சட்கு மிகவும் உகந்ததாகவுள்ளது.

அருளாளன்

## றமழான் சிந்தனை

''லைலத்துல் கத்ர்'' இரவில் ஜிப்றீல் (அலை அவர்கள் மலாயக்கத்துக்களின் ஒரு கூட்டத்துடன் விஜயம் செய்கின்றார்கள் நின்ற நிலையிலும், உட்கார்ந்தநிலையிலும் இபாதத்துக்களில் ஈடுபட்டிருப்போருக்கான நலவருள் பாலிக்கும்படி துஆ செய்கின்றார்கள்.


ஸஹர் முடிவு: 4-27

நோன்பு திறக்கும் நேரம்: 6-31

தொகுப்பு: சுல்பிக்கா – கௌது



# தன்னிகரில்லா தமிழர் தலைவர் : த...
# நல்லூர் மண்ணின் நாடாளும் உறுப்பி...
# உயர்திரு. மு. சிவசிதம்பரம் அவர்...



**1617ல்** போர்த்துக்கேயரிடம் ஆட்சியை இழந்துபடும்வரை — தனித்துவமான **ஆளுமையுடன் மிகுந்த ஆண்மையோடு** அன்னியரை எதிர்த்து போராடிய இறுதித் தமிழ் மன்னன் சங்கிலியன் ஆண்ட ... நல்லை மண்ணின் நாடாளுமன்ற உறுப்பினர் அண்ணன் மு. சிவசிதம்பரம் அவர்களின் 59 வது பிறந்த தினம் இன்று. அன்று அன்னியரிடம் சங்கிலியன் இழந்துபட்ட இறைமையை மீள்வித்து புனரமைக்கும் பணியில் மார்முரும் ஏற்றிப் போற்றும் வகையில் தன்னையே முற்றும் முழுதமாக அர்ப்டணித்திருக்கும் தலைவருக சங்கிலியனின் ''மறுபதிப்பாக'' நம்மிடையே காட்சிதருகின்றார் எம் அண்ணன். எனில் மிகையாகாது, தமிழ்தாய் தவமிருந்து பெற்றெடுத்த தலைவன்– தமிழ்ஈழ மண்ணிலே மலர்ந்த மைந்தன் திரு. மு. சிவசிதம்பரத்தின் பிறந்தநாள் இறுதிவரை அன்னியனை எதிர்த்துப் போராடிய வன்னிமன்னன் பண்டாரவன்னியனின் சிலை திறப்பு விழாவை அடுத்து கொண்டாடப்படுவதும் மிகவும் பொருத்தமானதே.

''சிலர் பிறக்கும்போதே பெரும்மனிதர்களாகப் பிறக்கின்றார்கள். சிலர் பிறந்து அரிய சாதனையின்மூலம் பெருமனிதர்களாகின்றனர். சிலரின் மீது பெருமை திணிக்கப்படுகின்றது'' என்னும் ஜெகச்சிற்பியின் கூற்றுக்குச் சிறந்ததோர் எடுத்துக்காட்டாக திரு. மு. சிவசிதம்பரம் மிளிர்கின்றார் என்பதை தமிழ்கூறும் நல்லுலகம் மறுப்பதற்கில்லை.

ஆசானபாகுவான தோற்றம்– அடக்கமான போக்கு– அவையடக்கப் பண்பு– கொடுமைகண்டு கொதித்தெழுகின்றதிறன்– ஆணித்தரமான சிம்ம கர்ச்சனை– சுயநல மறவே அற்ற தூரதிஷ்டிக் கருத்துக்கள்– எல்லாரும் இந்நாட்டு மன்னர்களே என்றெண்ணும் சமத்துவ உணர்வு

# தியாகத்தின் திருவுருவ...
# சங்கிலியனின் மறுபதிப்...

–தியாகத்தின் திருவுருவம்– தீந்தமிழினத்தின் ஒற்றுமையின் அடித்தளம்– நெறியான வாழ்வு– நெறிபிறழாத கொள்கைப்பிடிப்பு–இத்துணை குணாதிசயங்களும் இணைந்த சிறப்பு மிக்கதலைவர் சிவா அண்ணனே. தமிழ் இளைஞரகாக்கும் தெய்வமாயும் திகழ்கிறார். ''அரசியல் அயோக்கியரின் புகலிடம்'' என்ற ஆங்கில அறிஞனின் வாசகங்களை பொய்யாக்கிய பெருமனிதனவன்.


## க. சிவதாசன்

சைவமும் தமிழும் பேணி வளர்த்த நாவலரை; சுவாமி ஞானப்பிரகாசரை ஈன்றெடுத்த நல்லை மண்ணின் நாடாளும் உறுப்பினராய் அகிலமே வியக்கும்வகையில் அகில இலங்கையிலுமே தனி அங்கத்துவர் தொகுதியில் ஆகக்கூடிய வாக்குகளைப் பெற்று வரலாறு சமைத்த மக்களின் ஆணைபெற்ற தலைவனும் அண்ணனே.

மதுரமானஓசையை பிறப்பிப்பதாய் எவ்வாறு மத்தளத்தின் இருபுறமும் இடிபடுகின்றதோ அவ்வாறே காலமெல்லாம் கட்சிக் கோஷங்களின் கீழ் சிதறிக்கிடந்த தமிழினத்தை ஒன்றுபடுத்தி ஓரே அணியின் கீழ் கொண்டுவருவதற்காக அல்லல்களை ஏன் அடித்தளமற்ற அவதூறுகளைபொறுமையோடு ஏற்றுக்கொண்டு அவர் படைத்த சாதனையின் மறுவுருவே தமிழர் விடுதலைக் கூட்டணியாகும்.

நீதியின் சன்னிதானத்தில் தூக்குக்கயிறுகளை எதிர்கொண்ட இளம்வேங்கைகள் பலர் இன்று மீண்டும் சுதந்திரக்காற்றை சுவாசிப்பதற்கு அண்ணனின் வாதத்திறனும் மெய்வருத்தம் பாராத உழைப்புமே காரணமென்பதை எவரும் மறக்கமுடியாது. சத்தியத்தின் வெற்றிக்காக சர்வபரிபூரணமாக தன்னையே அர்ப்பணித்துக் கொண்ட உத்தமன் அவர் என்பதை உலகறியும். சந்தர்ப்பங்களை என்றுமே அவர் தேடிச்சென்றவரில்லை. அவை தேடி, நாடி, ஓடிவந்தவை என்பதை சரித்திரம் என்றும் சொல்லும்.

''அரசியல் பிழைத்தார்க்கு அறம் கூற்றுகும்'' என்பதை நடைமுறையில் மெய்ப்பிப்பு



தற்காக 1977ம் ஆண்...
தலில் பாதை மாறி...
பாடம்புகட்டிய பன்...
ஏற்றுக்கொண்ட இ...
திற்காக, இயக்க...
துன்பங்களை தெ...
சிரித்தமுகத்தோடு
அவற்றை நெஞ்சோடு
வைத்துக்கொண்...
அவரே. அல்லது
போல் சந்தி...
சந்தேகம் தொனிக்க
திரத் 'தமிழில்''
வீட்டிலிருந்து கல்...
ரில்லை.

வேறுபட்டு தமிழி...
சிப்பிரிவுகளின் கீழ் ஏ...
போட்டியாக அரசிய...
திய அந்தக்காலத்...
லும் தமிழினத்தின்
சிக்கு, எழுச்சிக்கு...
வாழ்விற்கு அடி...
உரிமைகட்கு ஆட்சி...
கெதிராக தொடுத்த...
...ங்கள் அனைத்திலும்
கோட்பாடுகளை கடந்...
கலந்துகொண்டு
சாது – பசிநோக்காது
கருத ... ந்த
பண்ட...
தலைமுறை...
எடுத்துக்கா...

தனிமரம் தோப்பாக...
பார்...ள் இல்லை; தே...
மென்றும் நிஜவாழ்வி...
பித்தவர். சிவா. த...
கிரஸின் ஏகப்பிரதிநி...
பாராளுமன்றத்தில்
வகித்தபோது
யாக்கிரகத்தை அடுத்...
துத் தமிழரசுப் பாரா...
உறுப்பினர்களும் வ...
சிவாவும் பணி... கா...
இருந்தகாலை ஆயுத...
யினரால் அடியுதைப...
ளுக்கும் ஆபத்து என்...
வரும் வேதனை கொள்...
வேளை தன் நே...
மறந்து ஆணித்தரமா...
யாளர் அஞ்சி நடுங்க...
ளும் அவையில் தன்...
மையால் சிம்மகர்ச்ச...
தவர் எங்கள் தங்க...
தலைவன் சிவசிதம்ப...
பதை...றியாதார் இல்...

தருமலையில் சருக்...
வல்வையில் உருக்...
தமிழர் விடுதலைக் கூட்...
உயிர் அளித்து அத...
றும் பேணிக் காக்...
பெரும் பொறுப்பை...
தற்காக தன்னையே
பிறர்க்கு வெளிச்ச...
'மெழுகுவர்த்தி' யாக...
பவரும் அவரே.

முடியுடை... மூவே...
ஒரு கொடியிலிட சோ...

## இஸ்லாமிய பெரியார் வாழ்த்து

யாழ். இஸ்லாமிய மத பெரியார் அல்ஹாஜ் எம். ஐ. எம். மீரான் மொகிதீன் ஆலிம் திருக்குர்ஆன் விரிவுரையாளர்– இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தி:

இலங்கையில் பல்வேறு பிரச்னைகட்கு மத்தியில் முப்பதாண்டுகட்கு மேலாக வாழ்ந்துவரும் தமிழ் பேசும் மக்களின் நல்வாழ்விற்காக கட்சிகளுக்கப்பாலும் நின்றுழைத்த தலைவர்களில் மதிப்பிற்குரிய திரு. மு. சிவசிதம்பரம் அவர்கள் குறிப்பிடத்தக்க ஒருவராவர்.

தமிழ்ப்பேசும் முஸ்லிம் சகோதரர்கட்கு இழைக்கப்படும் அநீதிகுறித்து ஆட்சியாளரிடம் வலியுறுத்திப்பேசிநீதி கிட்ட வழிசெய்வதில் என்றுமே முன்னணியில் நிற்கும் தலைவர் திரு. மு. சிவசிதம்பரம் அவர்கள் சென்ற ஆட்சிக் காலத்தில் புத்தளத்தில் நடைபெற்ற படுகொலைகள் குறித்துகுரலெழுப்பிய தலைவர்களில் அவரும் ஒருவர் என்பதை நாடறியும்.

59-வது அகவை பூர்த்தி அடைகின்ற தலைவர் திரு. மு. சிவசிதம்பரம் அவர்களின் பொதுப்பணி சிறக்க எல்லாம் வல்ல இறைவன் அவருக்கு நீண்ட ஆயுளையும் சரீர சுகத்தையும் கொடுக்க அவனை இறைஞ்சுகிறேன்.

## சிதம்பரனாரின் சீரியபணி

(தாமரைத் தீவான்)

''நாடாளுமன்றத்து நல்லூர் சிதம்பரரின்
ஈடேதுமில்லாத எம்பணியைப் — பாடாமல்
எம்மால் இருத்தல் இயலுமோ? காக்கின்ற
அம்மா தமிழே அருள்!''

இருபத்து மூன்றில் எம்கரவெட்டியில்
அருமுருகேசனார் அளித்திட வந்தீர்!
இளமையிற்தாயை இழந்து வளர்ந்தும்
இளங்கலைப்பட்டம் எடுத்ததோடன்றி
வழக்கில் அறிஞராய் வந்தீர்! வைத்திடும்
வழக்கெலாம் தள்ளிட வைத்தீர் பேச்சால்
சட்டத்திறமையால் தங்கமும் பெற்றீர்!
எட்டுத்திக்கிலும் இசைபல கொண்டீர்
அறுபதில் பா. உ ஆனீர் பிட்டியில்!
அறுபத்தை திலே ஆம் சபாநாயகர்!
எழுபத்தேழிலே இப்பதி உறுப்பினர்!
எழுபத்தெட்டிலே எம் அணித்தலைவர்!
இதுநாள் வரையிலே இன்னும் பலவுள!
எதிர்நாள் நீளும் எம்சிவா நும்பணி!
அறுபதாம் ஆண்டிலே அடியினைப் பதிக்கும்
பெருமதியுடையாய்! பெருந்தவப் பேறே!
சிரித்த முகத்தொடும் சீரியபண்பொடும்
பெருத்த உடலொடும் பேச்சுத்திறனோடும்
அணிப்பெருந்தூணாய் அமிர்ப்பெருந்துணையாய்
பணிகளில் முதலாய் பாசமார் பிறப்பாய்
பன்னாள் வாழ்ந்தே பலஅணி ஆற்றி
நன்னாள் ஒன்றிலே நம்தமிழ் ஈழம்
கண்டிடும் வழியை காட்டியே செல்க!
கொண்டிடும் மகிழ்வால் கூறினேம் வாழ்த்து!

## யாழ். ஆயர் வாழ்த்து

யாழ். ஆயர் அதி. வந் வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை வழங்கியுள்ள வாழ்த்துச்செய்தி.

ஈழம் வாழ் தமிழ் பேசும் மக்களின் விமோசனத்திற்காக உழைத்துவரும் பெருந்தலைவர்களுள் நல்லூர்த் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினரும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவருமான திரு. மு. சிவசிதம்பரம் அவர்களும் ஒருவர் என்பதைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

கடந்த முப்பது ஆண்டுகளாக தமிழ் மக்கள் தங்களது அடிப்படை உரிமைகளுக்ாகவும் அமைதியான சூழ்நிலையில் வாழவும் பல

(8–ம் பக்கம் பார்க்க)

# ...தமிழ் இளைஞர் காவலர் ...றுப்பினர் ...அவர்களின் 59 வது பிறந்ததின சிறப்பு மலர்



## ...புருவம்! ...பதிப்பு!



...ற்காக 1977ம் ஆண்டுத் தேர்
...லில் பாதை மாறியவர்கட்கு
...டம்புகட்டிய பண்பாளன்.
...ற்றுக்கொண்ட இலட்சியத்
...ற்காக, இயக்கத்திற்காக
...ன்பங்களை தொல்லைகளை
...மித்தமுகத்தோடு சந்தித்து
...வற்றை நெஞ்சோடு மட்டும்
...வைத்துக்கொண்டவரும்
...வரே. அல்லது சிலரைப்
...பால் சந்திசிரிக்க,
...ந்தேகம் தொனிக்க ''தந்
...ரத் 'தமிழில்'' கண்ணுடி
...ட்டிலிருத்து கல்லெறிபவ
...ல்லை.

...வேறுபட்டு தமிழினம் கட்
...ப்பிரிவுகளின் கீழ் ஏட்டிக்குப்
...பாட்டியாக அரசியல் நடத்
...ய அந்தக்காலக் கட்டத்தி
...ம் தமிழினத்தின் வளர்ச்
...க்கு, எழுச்சிக்கு ஏற்றமிகு
...ாழ்விற்கு அடிப்படை
...ரிமைகட்கு ஆட்சியாளருக்
...கதிராக தொடுத்தபோராட்
...ங்கள் அனைத்திலும் கட்சிக்
...காட்பாடுகளை கடந்து நின்று
...லந்துகொண்டு கண்துஞ்
...ாது – பசிநோக்காது – பலன்
...ருத [illegible] ந்த பாங்கு–
...ண்ட [illegible] திர்காலத்
...லமுறை [illegible] ல்லதோர்
...டுத்துக்கா [illegible]
...தனிமரம் தோப்பாகாது என்
...ார்கள் இல்லை; தோப்பாகு
...மென்றும் நிஜவாழ்வில் நிரு
...த்தவர். சிவா. தமிழ்க்காங்
...ரஸின் ஏகப்பிரதிநிதியாகப்
...ாராளுமன்றத்தில் அங்கம்
...கித்தபோது சத்தி
...ாக்கிரகத்தை அடுத்துஅனைத்
...த் தமிழரசுப் பாராளுமன்ற
...றுப்பினர்களும் வவுனியா
...வாவும் பனங்காடையில்
...இருந்தகாலை ஆயுதப்படை
...னரால் அடியுதைபட்டு ஆயு
...க்கும் ஆபத்து என்று அனை
...ரும் வேதனை கொண்டிருந்த
...வளை தன் நோவை,
...றந்து ஆணித்தரமாக ஆட்சி
...ளர் அஞ்சி நடுங்க நாடா
...ம் அவையில் தன் நாவன்
...மையால் சிம்மகர்ச்சனை புரிந்
...வர் எங்கள் தங்க தமிழ்த்
...லைவன் சிவசிதம்பரமென்
...தை அறியாதார் இல்லை.

...திருமலையில் சருக்கொண்டு
...வையில் உருக்கொண்ட
...தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு
...உயிர் அளித்து அதனை இன்
...னும் பேணிக் காக்கின்ற
...பெரும் பொறுப்பை சுமப்ப
...தற்காக தன்னையே அழித்து
...பிறர்க்கு வெளிச்சமாகும்
...மெழுகுவர்த்தி' யாகவிளங்கு
...வரும் [illegible] வரே.

...முடியுடை மூவேந்தரும்
...ஒரு கொடியிடை சேர்ந்தமை

## வாழும் சிவா நாமம்!

ஏறு எனத் தோற்றம்
எழுந்து அவன் நின்றால்
எச்சபையும் அடங்கும்
கூறுமவன் வார்த்தை
குண்டு எனப் பாயும்
கூனுடலும் நிமிரும்
நீறு அதன் நெருப்பு
நெருங்கி அதை அறியார்
நிச்சயமாய் அழிவார்
மாறுபடும் கொள்கை
மண்ணளவும் அறியா
மனிதனவன் நெஞ்சில்
கூறுபடும் தமிழர்
குலம் ஒன்றே காணும்
குறி மட்டும் உண்டு
பேறு என மண்ணில்
பிறந்த பெருந் தலைவன்
பெறற்கரிய செல்வம்

அடக்கம் அவன் சூடும்
அணியாரமாகும்
அதுவொன்றே போதும்
கடக்குமுயர் ஞானம்
கருணை; மனப் பண்பு
கடலளவும் கொஞ்சம்
தடக்குமவன் வாழ்வில்
தன்னலமே இல்லை
தமிழீழம் நோக்கி
நடக்குமவன் கால்கள்
நமக்கன்றி வேறு
நாட்டமதில் இல்லை
தொடக்கமுதல் இன்று
தொடர்ந்து வரும் மக்கள்
துதிக்குமொரு தலைவன்
வடக்கென்ன தமிழன்
வாழுமிட மெல்லாம்
வாழும் 'சிவா' நாமம்!

—வாகரைவாணன்

போன்று அமரர்கள் தந்தை செல்வா, ஜீ ஜீ, திருச்செல்வம் அனைவரும் ஒருமுகமாய் ''ட்ரயல் அட்பார்'' வழக்கில் நீதிமன்றில் நியாயத்தின் குரல்களாக ஒலிக்கச் செய்து தமிழினத்தின் ஒற்றுமையின் வலிவை உலகறியச் செய்வதில் காத்திரமான பங்களிப்பை கச்சிதமாக விளம்பரமின்றி நல்கியதை நாமறிவோம் நாடறியும்.

பரந்துபட்டு உலகெங்கும் இரந்துண்டு வாழும் இழி நிலையிலுள்ள ஆறரைக்கோடி தமிழர்கட்கு சொந்த நாடு வேண்டிய அவசியத்தை வெளிப்படுத்திய புகழ்மிக்க வட்டுக் கோட்டை பிரகடனத்தை'' வழிமறையாக நெறிபிறழாது முன்னெடுத்துச் செல்ல முன்னுதாரணமாக திகழ்பவர் அவர்.

நாடாளும் அவையில் எம் தமிழ் மாணவர்களின் திறமையை ஆசிரியர்களின் ஆற்றலை கேலிக்கூத்தாக்கும் வகையில் 'நுளம்பு''க் கதையோடு அமைச்சர் சிறில் மத்தியூ அங்கலாய்த்ததை அவசரக் குடுக்கையாய் சேற்றை எம் மீது வாரியிறைத்ததையும் அதற்கு பதிலாக நாடாளும் அவையே கிடுகிடுக்க வழமைக்கு மாறான நிசப்தத்துடன் அத்தனை உறுப்பினரும் வாய் பிழந்து'' செவிமடுத்திருக்க சிம்மநாதமென நீங்கள் ஆற்றிய சீரிய உரையை மாணவருலகம் மறந்திடாது. ஆதாரமற்ற அமைச்சரின் குற்றம் கண்டு கொதித்து நின்ற தங்களை சாந்தப்படுத்தி துணையாக தலைவர் அமிரும் சுடச்சுட தந்த பதில்களைக் கண்ட பின்னர் அமைச்சர் காமினி திஸாநாயக்கா தமதுரையில் 'தமிழர் விடுதலைக் கூட்டணியின் இரட்டைப்பீரங்கிகள் முழங்கி ஓய்ந்தன'' என்று வியந்து நின்றதை ஏடுகள் வாயிலாக அறிந்து மகிழ்ந்திடாதார் எவருளர்?

1960–ல் பாராளுமன்றத்தில் கன்னிப் பேச்சிலேயே சாந்தமென அனைவரையும் கவர்ந்த அண்ணன் சிவா, 1966– கலைவளர்க்கும் முத்தமிழ்சோலையாம் அண்ணாமலை பல்கலைக்கழக ஆண்டு நிறைவு விழாவில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு புகழ் சேர்த்தார். அதேவருடம் பெருமைமிக்க அமெரிக் 'ஹாவார்ட்' பல்கலைக்கழகம் சென்று சர்வதேச அரசியல் கருத்தரங்கில் கலந்து கொண்டு பாராட்டுதலை ஈட்டியவர் 'ஹாவார்ட் கோடைகாலச் செய்தி ஏடு 5–8–1966–ல் பாராட்டுக்களை விசேடமாக செய்திவெளியிட்டு மகிழ்ந்ததை பலரும் அறிவார்கள்.

''தலைவனே நீ புகழை எதிர்பார்த்து உழைக்காதே. அது உனக்குக் கிடைக்காமலே போகலாம். பொருளுக்காக உழைக்காதே. உன் ஆத்மாவையே விற்று விடுவாய். உன் உள்ளத்தின் நிறைவுக்காக உன் ஆத்மாவின் ஆனந்தத்திற்காக நீ பொதுப்பணியில் ஒன்றிவிடு பிறகு ஒரு வேளை நீ எதிர் பாராமலே புகழும் பொருளும் உன்னைத் தேடி வந்தாலும் வரலாம்'' எனும் ஆங்கிலக் கவிஞன் ஒருவனின் கவிதைக் கூற்றுக்கமைய அருந்தமிழ் காக்கும் அஞ்சா நெஞ்சனும் திரு. மு. சிவசிதம்பரம் திகழ்கிறார்.

## சிவாவை 'கண்ணபிரானாக' நான் காண்கின்றேன்

நானும் தலைவர் சிவசிதம்பரமும் அரசியலில் இரு துருவங்களாக இருந்தவர்கள். தந்தை செல்வாவை நானும் தலைவர் பொன்னம்பலத்தை சிவாவும் பின்பற்றிப் பல்லாண்டு பகையை வளர்த்துக் கொண்டவர்கள். பலவருடங்களாக எதிர்அரசியல் மேடைகளில் ஒருவரையொருவர் திட்டியவர்கள். இத்தகைய வேறுபாடுகளுக்கு மத்தியிலும் திரு. சிவசிதம்பரம் அவர்களின் அன்பும் பண்பும் எப்போதும் என்னைக் கவர்ந்தன.

**அ. அமிர்தலிங்கம்**
(எதிர்க்கட்சி முதல்வர்)

1961ம் ஆண்டு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமையில் கச்சேரிவாசல்களில் தமிழ் மொழி உரிமைகோரி சத்தியாக்கிரகப் போராட்டத்தை ஆரம்பித்தோம், முதல் நாளே பொலிசாரின் தாக்குதலுக்கு ஆளானோம். அக்கட்டத்தில் மாற்றுக் கட்சியிலிருந்தாலும் திரு. சிவசிதம்பரம் அப் போராட்டத்தில் முற்றுமுழுதாக ஒத்துழைக்க முன்வந்தார். 1961 ஏப்ரல் 17ந் திகதி நாமெல்லாம் கைதுசெய்யப்பட்டு பனாகொடை இராணுவ முகாமுக்குக் கொண்டுசெலலப் பட்டோம். தலைவனில்லாச் சேனையெனத் தத்தளித்த தமிழ் மக்களுக்கு அவசரகாலச் சட்டத்தின் மத்தியிலும் கூட்டுப்பிரார்த்தனைகளுக்கும் எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கும் தலைமை தாங்கி அபயமளித்த அன்பர் சிவாவை யாரும் மறக்கவே முடியாது.

1972ம் ஆண்டு தமிழ்த் தலைவர்கள் இனநலன் கருதித் தம் வேற்றுமைகளை மறந்து கூட்



டணியை அமைத்தபின் திரும்பிப்பார்க்கும் சிந்தனையே இன்றி தமிழினத்தின் ஒற்றுமையின் சின்னமாகத் தன்னை ஆக்கிக்கொண்டவர் திரு சிவசிதம்பரம் தந்தை செல்வாவின் மறைவின் பின் தமிழர் விடுதலைக் கூட்டணி சிதறிவிடுமென்று பலர் கனவு கண்டனர் ஆனல் தந்தையின் இறுதிக் கிரியை நடைபெற்ற அன்றே தனது இரங்கலுரையில் அவ்வெண்ணங்களைப் பகற்கனவாக்கித் தந்தை செல்வா தனது வாரிசாக என்னையே தெரிந்தெடுத்தார் என்று முழங்கிய தலைவர் சிவாவின் பெரிய மனதுக்கு இணையானது வேறுண்டா. எத்தனை பக்கங்களிலிருந்து பகைவர்கள் தாக்கினாலும் பயமின்றி நான் நிற்பதற்குக் காரணமாக இருப்பது ஒரேயொரு தைரியம்தான்—எந்தக் களத்திலும் எந்தக்கட்டத்திலும் தலைவர் சிவா என்பக்கத்தில் நிற்கின்றார் என்ற தைரியம்த்தான். அவருடைய நேர்மையும், தியாகமும்,—சிம்மக் குரலும், சிறந்த பேச்சுவன்மையும், அன்பும், பண்பும் தமிழினத்தின் விலைமதிக்கமுடியாத சொத்துக்கள் — தமிழர் விடுதலைக் கூட்டணியின் கவசங்கள்—யுத்தகளத்தில் அருச்சுனனின் காவல்துணையான கண்ணபிரானாக அவரை நான் காண்கிறேன். தலைவர் சிவா இன்று 20ம் திகதி 59வதுவயதையடைகிறார். அவர் இன்னும் பல்லாண்டு வாழ்ந்து விடுதலை பெற்ற தமிழீழத்தின் தலைவராகவிளங்க எல்லாம் வல்ல இறைவனின் அருளை வேண்டுகிறேன்.

## தன்னெடுக்கம்மிக்க தலைவன்

''பல்லினங்கள் கூடி வாழும் நாட்டில் ஒரு தேசிய இனத்தின் தலைவனது மகிமை அவன் தனது இனத்தின் வளர்ச்சிக்கும் எழுச்சிக்கும் ஆக்கபூர்வமாக ஆற்றும் பணியினை மையமாகக்கொண்டதாகும். ஆனல் இனத்தின் மத்தியில் ஒற்றுமையின்றி வளர்ச்சியையோ எழுச்சியையோ அடையமுடியாது'' இலங்கைத் தமிழ் மக்களின் ஒற்றுமையையேமுழுமூச்சாகக் கொண்டு உழைத்துவருபவரும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் தன்னெடுக்கமிக்க தலைவராகவும், தமிழ் மக்களின் சாத்வீக அரசியல் ஞானியாகவும், விளங்கும் முருகேசு சிவசிதம்பரத்தின் ஐம்பத்தொன்பதாவது பிறந்த தினம் இன்றாகும்.

வடமராட்சியில் பரம்பரை பரம்பரையாகச் சைவமும் தமிழும் தழைக்க உழைத்த மிகப் பிரபல்யம் வாய்ந்த குடும்பத்தைச்சேர்ந்த கரவெட்டிசிற்றம்பல முதலியார் சின்னத்தம்பி முதலியார் ஆகிய இருபெரு முதலியார் பட்டம் பெற்ற மணியகாரர்களின் பேரனாகவும், முருகேசு உடையாரின் மூத்த புதல்வனாகவும் சிவசிதம்பரம் அவர்கள் ஜூலை மாதம் 20–ம் திகதி 1923–ம் ஆண்டு பிறந்தார். வறுமையின் சாயல் தெரியாது வாறுவளர்க்கப்பட்ட சிவசிதம்பரம் மற்றவர்கள் எதிர்பார்த்ததற்கு மாறான திசையில் எதிர்நீச்சலடிக்கத் தொடங்கினர் சிவசிதம்பரமோ அடக்கப்பட்ட, ஒதுக்கப்பட்ட, சுரண்டப்பட்ட ஏழிய மக்களின் அவலக்குரலினல் ஈர்க்கப்பட்டு சமூக சமத்துவத்தைக் கொண்ட சமதாம சமுதாயம் படைக்க விரும்பியதனல் சிவப்பு நிறத்தின் மீது வரது நெஞ்சம் காதல் கொண்டது.

'நாமார்க்குங் குடியல்லோம்' என்ற அப்பரின் தேவாரத்துடன் பூசையறைக்குள் நுழைந்து விட்டால் வெளிக்கிடுவதற்கு அரைமணி நேரமாவது செல்லும் தான் பிறந்த மண்ணாகிய கரவெட்டியிலுள்ள தனது பாட்டனரின் கல்லூரியான விக்னேஸ்வரக் கல்லூரியில் தனது ஆரம்பக்கல்வியை முடித்துப் பின்னர் கொழும்பு பரிசுத்த சூசையப்பர் கல்லூரியில் இடைநிலைக்கல்வியைக் கற்றுத் தனது உயர்தரக்கல்வியைப் பல்கலைக்கழகக் கல்லூரியிலும், சட்டக்கல்லூரியிலும் பெற்று இன்று இலங்கையிலேயே மிகச் சிறந்த கிறிமினல் வழக்கறிஞராகத் திகழ்கின்

[8–ம் பக்கம் பார்க்க]

**சந்திரவதனன்**

## பண்டிதமணி வாழ்த்து

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை வழங்கிய வாழ்த்துரை:

''நல்லூர் பாராளுமன்ற உறுப்பினர் கனம் முருகேசு சிவசிதம்பரம் அவர்கள் பிறந்த தேதி 20–7–1923.

இன்று 20ம்தேதி 59ம் வயசு பூர்த்தி.

''அவர்களுக்கு நீண்ட ஆயுளும் தேக நலனும் அருளுக என்று திருவருளை வேண்டி அவர்களை வாழ்த்துவோமாக

## நன்றி....

மலர் வெளியீட்டிற்கு
ஆக்கங்கள் தந்தோர்-
அள்ளி வழங்கிய
வள்ளல்கள்- ஊக்க
மளித்த பெரியவர்கள்-
உறுதுணையாக நின்ற
உடன் பிறப்புக்கள்
அனைவருக்கும்நன்றிகள்

பெ. கனகசபாபதி,
(செயலாளர்,
த வி. கூ. நல்லூர்க்கிளை)

# இஸ்ரேலின் புகலிடயோசனையை

# அரபாத் நிராகரித்தார்!

## "பாலஸ்தீனியர் தொடர்ந்து பெய்ரூட்டில் இருப்பார்கள்"

பெய்ரூட், ஜூலை 19

பாலஸ்தீனர்களுக்கு ஒருசில நிபந்தனைகளுடன் புகலிடம் வழங்குவதாக இஸ்ரேல் தெரிவித்தயோசனையை பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் ஜனுப் யாசீர் அரபாத் முற்றுக நிராகரித்துள்ளார்.

பாலஸ்தீனர்களுக்குபெய்ரூட்டிலிருந்து வெளியேறுவதற்கு விதித்த கால அவகாசம் முடிவடையவிருப்பதையடுத்தே இஸ்ரேலியப் பிரதமர் பாலஸ்தீனர்களுக்கு ஒருசில நிபந்தனைகளுடன் புகலிடம் கொடுக்க முன்வந்திருந்தார். ஆனுல் பாலஸ்தீனத் தலைவர் ஜனுப் அரபாத் இஸ்ரேலின் நிபந்தனைகளை முற்றுக நிராகரித்துள்ளதுடன், பாலஸ்தீனர்கள் தொடர்ந்தும் பெய்ரூட்டிலேயே இருப்பார்கள் என்றும் தெரிவித்துள்ளார்.

பாலஸ்தீன இயக்கத்தவரின் இந்த நிராகரிப்பையடுத்து அவர்களுக்கு எதிராக மேற்கொண்டு எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து இஸ்ரேலியப் பாராளுமன்றத்தில் அமைச்சர்கள் நேற்றுக் கூடி ஆராய்ந்தனர்.

இக்கூட்டத்தில் பெரும்பான்மையானவர்கள் அமெரிக்க அதிபர் திரு. றீகன் மேற்காசியத் தகராறு தொடர்பாக ஒருசில மத்தியகிழக்கு நாடுகளின் தலைவர்களை வாஷிங்டனில் சந்தித்துப் பேசவிருக்கின்ருரென்றும், அப் பேச்சுவார்த்தைகளின் முடிவையடுத்தே இஸ்ரேல் தனது நடவடிக்கைகளைத் தீர்மானிக்கவேண்டுமென்றும் தெரிவித்தனர்.

ஆனுல் இஸ்ரேலியப் பாதுகாப்பு அமைச்சர், காலஅவகாசம் முடிவடையும்பட்சத்தில் பாலஸ்தீனியர்களை பெய்ரூட்டிலிருந்தும் உடனடியாக அப்புறப்படுத்த வேண்டுமென தெரிவித்தார்.

இது இவ்வாறிருக்க மேற்கு பெய்ரூட்டின் தென்பகுதியில் நேற்றுமுன்தினம் பாலஸ்தீன கொரில்லாக்களும், இஸ்ரேலியப்படைகளும் சிறுமோதல் ஒன்றில் ஈடுபட்டனர். இம் மோதலில் பீரங்கிவேட்டுக்களையும் இடையிடையே சாதாரண துப்பாக்கிவேட்டுக்களையும் கேட்கக் கூடியதாகவிருந்தது. உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லை. (கி)

## சிற்றூழியர் நிரந்தர நியமனம்: நேர்முகப்பரீட்சை ஆரம்பம்

(கரவெட்டி)

யாழ். மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் தற்காலிகமாகப் பணியாற்றும் சிற்றூழியர் தரத்திலான ஊழியர்கள் விரைவில் நிரந்தரமாக்கப்படவுள்ளார்கள். இதனைத் தொடர்ந்து பிரஸ்தாப ஊழியர்களை நிரந்தரமாக்குவது சம்பந்தமான நேர்முகப் பரீட்சை நேற்று திங்கட்கிழமை முதல் யாழ் கல்வித் திணைக்களத்தில் நடைபெற்று வருகிறது.

மூன்று தினங்கள் நடைபெறும் இந்த நேர்முகப் பரீட்சையில் 150 பேர் அழைகப்பட்டுள்ளார்கள்.

## ஆலோசகர்கள் நியமனம்

மன்னர்)

மன்னர்மாவட்ட அபிவிருத்தி சபையின் பேசாலை உப அலுவலகத்தின் ஆலோசகர்களாக மூவர் மன்னர் மாவட்ட அபிவிருத்தி பையினுல் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பேசாலையைச்சேர்ந்த ஆசிரியர்கள் திரு அன்ரன் பச்சேக், திரு மாட்டின் டயஸ், தொழிலதிபர் திரு என். எஸ். குரூஸ் அகியோரே ஆலோசகர்களாக நியமிக்கப்பட்டவர்களாவர்.

## பாவனையாளர் பாதுகாப்புச் சங்கம்

(துணுக்காய்)

துணுக்காய் பகுதி பாவனையாளர் பாதுகாப்பு சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் துணுக்காய் கிராமஅபிவிருத்தி சங்க மண்டபத்தில் நடைபெற்றது இக்கூட்டத்திற்கு பிரதம அதிதிகளாக துணுக்காய் பிரிவு உதவிஅரசாங்க அதிபர் திரு க. குலேந்திரா வும், முல்லைத்தீவு உதவிவிலைக் கட்டுப்பாட்டு ஆணையாளர் திரு சி. மதிவதனும் கலந்துகொண்டுஉரையாற்றினுர்கள். பின்வருவோர் நடப்புவருட உத்தியோகத்தர்களாகதெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: ப. பயில்வாகனம், உபதலைவர்: வே. சந்தையா, செயலாளர்: க. இராசநாயகம், உபசெயலாளர்: து. செல்வராசா, பொருளாளர்: ந. நவபாலகுமார்.

4 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவுசெய்யப்பட்டது.

## சமாதான நீதவான் வீரவாகுவுக்கு பாராட்டு

(புலோலி)

'அரசாங்கம் திரு. வீரவாகுவுக்கு அகில இலங்கை சமாதான நீதவான் பதவியை வழங்கியதற்காக, நான் அரசாங்கத்திற்கு நன்றி கூறுகிறேன்.'

இவ்வாறு மேலைட்புலோலி மக்களால், அகில இலங்கை சமாதான நீதவானுக நியமிக்கப்பட்ட திரு மு. பொ. வீரவாகுவைப் பாராட்டி நடத்தப்பட்ட விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய பருத்தித்துறை நகர முதல்வர் சட்டத்தரணி எம். வேலும் மயிலும் குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:-

'சமாதான நீதவான் பதவி ஒருவரின் குணுதிசயங்கள், சேவைமனப்பான்மைகள் என்பனவற்றைக் கவனித்தே அரசாங்கத்தால் வழங்கப்படுகிறது. இந்நிலையில் திரு வீரவாகு அப்பதவிக்கு மிகப் பொருத்தமானவர். தகுதியானவர், இவரது தகப்பனுர் பொன்னுச்சாமி கப்பலோடி பர்மா, நாகபட்டினம் போன்ற நாடுகளுடன் வர்த்தகத் தொடர்புவைத்திருந்தார். ஏற்றுமதி இறக்குமதி நடவடிக்கைகளில் சிறந்து விளங்கினுர். இதனுல் மக்கள் பெரிதும் நன்மையடைந்தார்கள். அவர் மக்களுக்கு அளப்பரிய சேவைகளையும் செய்தார். இப்படியான குடும்பத்தில் பிறந்த திரு. வீரவாகுவுக்கு சமாதான நீதவான் பதவி தகுதியானது. இவர் நிதானமானவர் எவரும் இவரை ஏமாற்றமுடியாது.'

## லண்டன்ரயில்கள் நகரத்தொடங்கின

லண்டன், ஜூலை 19

கடந்த இரண்டு வாரகாலமாக இங்கிலாந்தில் ரயில் சாரதிகள் மேற்கொண்ட வேலைநிறுத்தம் நேற்றுடன் முடிவடைந்தது.

இவ்வேலைநிறுத்தத்தினுல் ரயில்சேவை மிகவும் சீர்கெட்டிருந்தது.

ரயில்வே திணைக்களம், ரயில்சேவையை முற்றுக நிறுத்துவதா? அல்லது வேலைநிறுத்தத்தில் ஈடுபடாத ஊழியர்களுடன் சேவையை நடத்துவதா? அல்லது வேலைநிறுத்தக்காரரை பதவிலிருந்தும் நீக்கிவிட்டு புதியவாகளை அமர்த்துவதா? என்று ஆலோசித்துவந்ததென்பதும் குறிப்பிடத்தக்கது.

இவ்வேலைநிறுத்தத்தால் இங்கிலாந்துக்கு பல கோடிக்கணக்கான ரூபா நஷ்டமேற்பட்டிருந்தது. (கி)

## டென்னிஸ் சுற்றுப்போட்டியில்வெற்றி

# ரமேஷ்கிருஷ்ணன் 75,000 டாலர்பெற்றுர்!

பிராஸ்பேர்ட், ஜூலை 19

மேற்கு ஜெர்மனியில் ஸ்ரட்கார்ட்டில் நடைபெற்ற 'கிராண்ட்பிறி டெனிஸ் பந்தயத்தில், தென்னிந்திய வீரரான திரு ரமேஷ் கிருஷ்ணன் வெற்றிபெற்றுள்ளனர். 75,000 டாலர் பெற்றுர்.

திரு. ரமேஷ் கிருஷ்ணன் அமெரிக்க வீரர் ஒருவரையே எதிர்த்தாடினுர். திரு. ரமேஷ் கிருஷ்ணனின் தந்தையரான திரு. ராமநாதன் கிருஷ்ணன் இங்கிராண்ட்பிறி வெற்றியை 1968-ல் வெற்றிபெற்றிருந்தாரென்பது குறிப்பிடத்தக்கது.

திரு. ராமநாதன் கிருஷ்ணன் இந்தியக் கடற்படையில் ஓர் உயர் அதிகாரியாக இருந்துவருகின்ருர். (கி)

## கூட்டுறவுச் சங்கங்களில் பெருச்சாளிகள்!

### கூ. சிக்கன சேமிப்புச் சங்க வெள்ளிவிழாவில் 'அமி'

[யாழ்ப்பாணம்]

'கூட்டுறவுச்சங்கங்களில் பெருச்சாளிகள் புகுந்து விட்டதால், அங்கு ஊழல்கள் மலிந்துவிட்டன'' என்று எதிர்க்கட்சி முதல்வர் திரு. அ அமிர்தலிங்கம் யாழ். சௌக்கிய சேவைக் கூட்டுறவுச்சிக்கன சேமிப்புக்கடன் நிவிர்த்திச்சங்க வெள்ளி விழாவில் பேசுகையில் கூறினுர் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற இவ் விழாவில் திரு அமிர்தலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பேசினுர் வெள்ளிவிழா அதன் தலைவர் திரு. ச. சிவரத்தினம் தலைமையில் நடைபெற்றது.

#### விளையாட்டுப் போட்டி

வெள்ளி விழாவையொட்டி ஆண்கள் பெண்களுக்கான சைக்கிளோட்டம், மரதன் ஓட்டம், கயிறிழுத்தல் போட்டிகள் நடைபெற்றன.

கூட்டுறவுக்கொடியை வடபகுதிச் சிரேஷ்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு.எஸ். ஜெயகாந்தன் ஏற்றிவைத்தார். யாழ், கூ. அ. ஆ உ. ஆணையாளர் திரு,எஸ் ஞானப்பிரகாசம் மங்கள விளக்கேற்றினுர்.

திரு அமிர்தலிங்கம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

#### குறைந்த வேதனம்

''குறைந்த வேதனத்தோடு சிறந்த சேவையாற்றும் சௌக்கிய சேவை ஊழியர்கள் கூட்டுறவு சிக்கன சேமிப்பு சங்கமூலம் தங்கள் கஷ்ட நிலையை நிவிர்த்தி செய்வதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்

'சௌக்கிய சேவையிலுள்ள ஊழியர்களுக்கு அவர்க செய்யும் சேவைக்கு ஈடாக ஊதியம் வழங்கப்படவில்லை.

#### பெருச்சாளி ஊடுருவல்

''கூட்டுறவுச்சங்கங்களில் பெருச்சாளிகள் ஊடுருவியுள்ள இக்காலத்தில் யாழ் சௌக்கிய சேவைக்கூட்டுறவுச் சங்கம் கடந்த 25 ஆண்டுகளாக திறம்படச் செயலாற்றி வருவதையிட்டு அந்த ஊழியர்களைப் பாராட்டுகின்றேன்.

''கூட்டுறவுச்சங்க வளர்ச்சிக்கு நேர்மையும் நாணயமும் அவசியம். இவை கூட்டுறவுக்கு அச்சாணி போன்றவை.

''தமிழ்மக்கள் சேமிப்புக்கும் சிக்கனத்துக்கும் பேர்போனவர்கள் பழையகாலத்தில் பானைகளிலும் நிலத்திலும் பொருளைப் புதைத்து வைத்துச் சேமித்துவந்தார்கள் இதனுல் தாமும் பயனடைய முடியாததுடன் மற்றவருக்கும் பலனில்லாமல் போய்விட்டது. யாழ் சௌக்கிய சேவைக் கூட்டுறவு சிக்கன சேமிப்பால் ஊழியர்கள் கஷ்டமான காலத்தில் கடன் பெறவும் ஒய்வு பெறுங்காலத்தில் ஊதியம் பெறவும் வழி சமைக்கிறது.

''48 உறுப்பினர்களோடு ஆரம்பித்த யாழ். சௌக்கிய சேவைக்கூட்டுறவுச் சிக்கன சேமிப்புக்கடன் நிவர்த்திச் சங்கம் இன்று 524 உறுப்பினர்களைக் கொண்டதாகவும் பத்து லட்சம் ரூபாவை மூலதனமாகக் கொண்டதாகவும் விளங்குவதையிட்டு எவரும் பெருமைப்படாமல் இருக்க முடியாது''

#### ஆலால் பேச்சு

கோப்பாய் எம். பி. யும், ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுச் சபைத்தலைவருமான திரு.மு. ஆலாலசுந்தரம் பேசுகையில் கூறியதாவது:

''பல்வேறு காரணங்களால் எத்தனையோ சேமிப்புச்சங்கள் செயலற்றும் சீர்குலைந்தும் இருக்கிற இடம் தெரியமல் மறைந்தும் போயிருக்கிற இக்காலகட்டத்தில் இச் சங்கம் வெள்ளிவிழாக் கொண்டாடுவதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன்.

''சீர்குலைந்துள்ள ஐக்கிய நாணயசங்கங்களுக்கு மீண்டும் புத்துயிரளிப்பதற்கு முயற்சி எடுத்துள்ளோம்.

(7-ம் பக்கம் பார்க்க)

## எதியோப்பியா - சோமாலிய துருப்புகள் எல்லையில் மோதல்!

### சோவியத் டாங்கிகளை எதியோப்பியா பாவித்ததாம்

அடிஸ் அபாவா, ஜூலை 19

ஆபிரிக்க நாடுகளான சோமாலியாவுக்கும், எதியோப்பியாவுக்குமிடையேயான எல்லையில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற மோதலில் பதினைந்து எதியோப்பிய வீரர்கள் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர்.

எதியோப்பியா, இம்மோதலில் தனது நாட்டுப்படைகள் ஈடுபடவில்லை என்றும் சோமாலியாவில் அரசைக் கவிழ்க்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ள கிளர்ச்சிக்காரரே ஈடுபட்டனர் என்றும் தெரிவித்துள்ளது. ஆனுலும் சோமாலியா இக்கூற்றினை மறுத்துள்ளதுடன் எதியோப்பிய வீரரே மோதலில் ஈடுபட்டிருந்தனர் எனத் தெரிவித்தது.

மோதலின்போது எதியோப்பிய வீரர்கள் சோவியத் தயாரிப்பு பீரங்கிகள், டாங்கிகள் போன்ற இராணுவ வாகனங்களை ஈடுபடுத்தினர் என்றும் சோமாலியா மேலும் தெரிவித்துள்ளது. (கி)

# "அரசாங்கத் தலையீட்டினால் கூட்டுறவுத்துறை முன்னேறவில்லை"

## யாழ். எம். பி. யோகேஸ் கூறுகிறார்

[கோண்டாவில்]

''கூட்டுறவுத்துறை பின்தங்கிய ஒன்றாக இன்று விளங்கக் காரணம் அரசாங்கமே. அரசாங்கம் கூட்டுறவுத்துறையின் நடவடிக்கைகளில் ஈடுபட்டமையினாலேயே ஊழல்கள் நிறைந்து கூட்டுறவுத்துறை முன்னேற்றம் பெறமுடியாத ஒரு நிலையில் இன்று காணப்படுகின்றது. தமிழ்மக்களைப் பொறுத்தவரையில் கூட்டுறவுத்துறை புதிய ஒன்றல்ல.

மேற்கண்டவாறு யாழ்ப்பாணம் எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் கூறினார்.

சர்வதேச கூட்டுறவுத் தின விழா நல்லூர் பலநோக்கக் கூட்டுறவுச் சங்கத்தினால் சங்கத்தலைவர் திரு. ந. அருணாசலம் தலைமையில் சங்க களஞ்சிய முன்றலில் நடைபெற்றது.

இவ்விழாவில் தொடர்ந்து பேசிய திரு யோகேஸ்வரன் கூறியதாவது: ''இன்றைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததும் அமைச்சர் திரு. தேவநாயகம் தலைமையில் கூட்டுறவுத் துறைபற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கும்படி நாடாளுமன்ற மூன்று உறுப்பினர்களையும் கொண்ட ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. ஆனால் இக்குழு நியமிக்கப்பட்டு விசாரணை முடிந்தும் பல வருடங்களுக்கு மேலாகியும் அறிக்கை வெளிவரவில்லை. ஆனால் இது பற்றி அமைச்சரிடம் கேட்டால் அவர் கூறுகின்றார் அறிக்கை வெளிவராத போதிலும் ஆணைக்குழுவின் சிபார்சின் பேரிலேயே நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

யாழ் மாவட்ட அபிவிருத்தி சபை உறுப்பினர் திரு சி. நாகராசா, வடபிரதேச ஐக்கிய கூட்டுறவாளர் சபை செயலாளர் திரு சிவசுப்பிரமணியம், மகளிர் குழுத்தலைவி திருமதி மனோன்மணி சண்முகதாஸ், தெல்லிப்பழை ப. நோ. கூ. ச. தலைவர் திரு. சிவமகாராசா ஆகியோரும் உரையாற்றினர்.

ஹரன் யாழ். நகர்
தினசரி 4 காட்சிகள்
அண்ணாவின் ஆசை

-வது வாரம்
வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி: 6-15, 9-30
சனி, ஞாயிறு 2-30
கமலஹாசன்-ஸ்ரீதேவி
குரு (கலர்)

றீகல் [யாழ்நகர்] தினசரி; 10-30, 2-30, 6-15, 9-30
இன்றுமட்டும் சிவாஜி நடித்த
மோகனப் புன்னகை (கலர்)
அடுத்தவெளியீடு 'கயலும் கயரும்' (மலையாளம் கலர்)

ராணி (யாழ் நகர்) 3-வது வாரம்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-சுஜாதா-ஸ்ரீதேவி
விஸ்வரூபம்
[ஈஸ்ட்மன் கலர்]

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
HIGH ANXIETY

லிடோ (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன்
ராஜபார்வை

Windsor (Jaffna) Last Few Days
Daily 10-30, 2-00, 4-30, 7-00 and 9-30 P.M.
BRUCE LEE in
THE GAME OF DEATH
(Color)
உலக சாம்பியன் புரூஸ்லியின் பயங்கரமான கராட்டி சண்டைகள் நிறைந்த படம்

ஸ்ரீதர் (யாழ். நகர்)
10-30, 4-30, 7-00, 9-30
Sat. Sundays 2-00 p. m.
Escape of the Birdmen

சாந்தி (யாழ்நகர்) 10-30, 2-30, 6-30, 9-45
பரபரப்பூட்டும் 9-வது கடைசி வாரம்!
கடல் மீன்கள் —கலர்—

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
100-வது வெற்றித் திருநாளை நோக்கி
கார்த்திக்-ராதா-தியாகராஜன்
அலைகள் ஓய்வதில்லை (கலர்)

RAJAH Jaffna TODAY ONLY
Daily 10-30, 2-00, 4-30, 7-00, 9-30
Alan Alda Michel Caine—Elaine May in
California Suite (Color)

### கூட்டுறவுச்....

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கென ஒரு சமாஜத்தையும் உருவாக்கியுள்ளோம்.

### இச்சங்கம் கூட்டுறவில் சரித்திரம்

' யாழ், சௌக்கிய சேவைக் கூட்டுறவுச்சங்கம் கூட்டுறவு வரலாற்றில் ஒருசரித்திரம் படைத்துள்ளது. சிந்திக்க மறந்தவர்களை சிந்திக்க வைத்துள்ளது. ப. நோ. கூ. சங்கம் போன்ற மற்றும் ஒரு சில சங்க ஊழியர்கள் குறைவான சம்பளத்தைப் பெறுவதுடன் எச்சந்தர்ப்பத்திலும் கடன் பெறமுடியாத நிலையிலிருக்கிறார்கள் யாழ், சௌக்கிய சேவைக்கூட்டுறவுச்சங்க ஊழியர்களைப் போல் இவர்களும் சங்கம் அமைக்க முன்வரவேண்டும்.

### ஆடம்பர வாழ்வால் அழிவு

எங்கிருந்தோ பணம் வருவதால் எமது மக்கள் ஆடம்பர வாழ்க்கையில் ஈடுபட்டுள்ளார்கள். இதனால் பெரும் சிக்கல்கள் தோன்றியுள்ளன. கிராம மட்டத்திலுள்ள சாதாரண தொழிலாளியும் ஆடம்பரமாக வாழுபவரைப் பார்த்துத் தானும் வாழத்தலைப்படுகிறான். இந்நிலை எந்தளவுக்குப் போகுமோ தெரியாது. முடிவில் எமது இனம் நாடோடியாக வாழவேண்டியேற்பட்டுவிடும்.

### சுகாதார அத்தியட்சகர்

யாழ். சுகாதார அத்தியட்சகர் வைத்தியகலாநிதி க. மாணிக்கம் பேசுகையில் பல கூட்டுறவுச்சங்கங்களில் ஊழல்கள் நிலவுவதாகப் பத்திரிகைகளில் செய்திகள் வந்து கொண்டிருக்கும் இக்காலத்தில் யாழ். சௌக்கிய சேவைக் கூட்டுறவுச்சங்கம் முன்னேறிப்பல சேவைகள் செய்வதையிட்டுப் பெருமிதமடைகிறேன் என்றார்.

### வைத்தியசாலை அதிபர்

யாழ். அரசினர் வைத்தியசாலை அதிபர் வைத்தியகலாநிதி செ. சு. நச்சினார்க்கினியன் பேசுகையில், யாழ். வைத்தியசாலை இயங்குவதற்கு இச் சங்கம் பண உதவிசெய்து வருவதையிட்டுத் தாம் மகிழ்ச்சியடைவதாகத் தெரிவித்தார்.

எதிர்க்கட்சி முதல்வர் திரு. அமிர்தலிங்கம் வெள்ளி விழா மலரை வெளியிட்டு வைத்தார்.

விளையாட்டுப் போட்டியில் வெற்றியீட்டியோருக்கு திருமதி எஸ். ஞானப்பிரகாசம் பரிசில்கள் வழங்கினார்,

சங்கச் செயலாளர் திரு. சீ. செல்லத்துரை நன்றிதெரிவித்துப்பேசினார். கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன' (மா)

# இன்றைய பலன்

[illegible] மாதம் 4-ம் திகதி

செவ்வாய்க்கிழமை

(20-7-82)

மேடம்: வரவில் உயர்வு தென்படும். பெரியவர்களின் வாழ்த்தும் கிடைக்கும். எழுத்தாளர்களுக்குப் புகழ் குவியும். கலைஞர்களுக்கு இன்று சிறப்பான நாள். புதினத்திற்கு இடமுண்டு.

இடபம்: நடையில் தயக்கம் ஏற்படும். உங்கள் விடயத்தில் இன்று உண்மையும் ஊமையாகிவிடும். உடல் நலம் சிறிது பாதிக்கப்படலாம். செய்கருமங்களில் மந்தநிலை தென்படும்.

மிதுனம்: இனப்பூசலின் மூலம் இதயபாரம் ஏற்படும். திடீர் முடிவுக்கு வருமாறு நிர்ப்பந்திக்கப்படுவீர்கள். எதையும் தாங்கும் இதயத்துடன் செயலாற்றின் நிலைமையை சமாளிக்க முடியும்.

கடகம்: நிதியில் அபிவிருத்தி தென்படுகின்றது. பூர்வீகச் சொத்தொன்று உமக்குக் கிடைக்கலாம். உடல் நிலையில் திருப்பங்கள் ஏற்படும். இன பந்துக்களின் கொண்டாட்டங்களுக்கு இடமுண்டு:

சிங்கம்: பேராசையின்மூலம் குறுக்குவழியை நாடுவீர்கள். இதனால் விபரீதங்கள் தோன்றக்கூடும். மறைமுக எதிர்ப்புகளை சமாளிக்க வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படலாம்.

கன்னி: ஆக்கப் பணியில் ஈடுபடுவீர்கள். பிறருடைய ஆதரவு தாராளமாகக்கிடைக்கும். தாய் வழிமூலம் நற்செய்தி கிடைக்கலாம். எதிர்பாராத விருந்துபசாரத்திற்கும் இடமுண்டு.

துலாம்: புண்ணிய காரியங்களில் அதிக ஈடுபாடு ஏற்படும். பொதுத் துறையில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள். இல்லத்திலும் இனிமைக்கு இடமுண்டு. மகிழ்ச்சிகரமான தினம்.

விருச்சிகம்: என்னதான் திறமைசாலியாக இருந்த போதிலும் இன்று கோட்டைவிட நேரிடலாம், முகமன் பேசுபவர்களிடம் மிகவும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

தனு: பொய்க்கோபம் காட்டிய ஒருவர் இன்று உம்முடன் இணைந்து வருவதற்கு முற்படுவார். காதல் ஜோடிகளுக்குப் புதிய ஆதரவுகள் கிடைக்கலாம். வாழ்க்கையில் வசந்தம் நிலவும்.

மகரம்: ஆணவப் போக்கு அடிசறுக்க வைக்கும். பின்னணியில் மோசடி வேலைகள் நடைபெறலாம். மேலதிகாரியின் கழுகுப் பார்வை உங்களை வட்டமிடலாம். நிதானம் வேண்டும்.

கும்பம்: புதிய நம்பிக்கையுடன் வாழ்க்கையை ஆரம்பிப்பீர்கள். தெய்வத்தின் அருளும் கிடைக்கும். தங்கள் செயற்திறமைமற்றவர்களைத் திகைக்க வைக்கும். நல்ல தினம்.

மீனம்: எதிலும் ஒரு மாற்றத்தை விரும்புவீர்கள். மனதில் புதிய எண்ணங்கள் வட்டமிடும். வியாபாரிகளுக்கு அதிக ஆதாயம் கிடைக்கக்கூடும். பிரயாணத்துக்கும் இடமுண்டு.

சோதிடக்கலாநிதி
திருமலை
கூ. வேலுப்பிள்ளை

### கொட்டிலில்

[3-ம் பக்கத் தொடர்ச்சி)

### செல்லப்பாவின் தேசிய மனப்பான்மை

தமிழ்பேசும் பொதுமக்கள் யாவருக்கும் பொதுவான நூலகமாதலால் சைவர்கள், கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள் எல்லோரையும் கரங்கூப்பி அழைத்தார். தமிழ் தமிழ் எனக் கூறுவதால் தாம் பிறமொழிகளைப் புறக்கணிப்பதாகக் கருதக்கூடாது என்றும் பகிரங்கமாக விளக்கினார்.

நூலகத்தில் ஆங்கிலம், சமஸ்கிருதம் முதலிய மொழிகளிலான நூல்களும் இடம் பெறும் என்றார். நாட்டில் வாசிக்கும் பழக்கத்தை உற்சாகப்படுத்தி, மாணாக்கர்களை நல்வழிப்படுத்தி, குற்றங்களைக் குறைக்கவும் தடுக்கவும் வழி வகுத்து, ஆராய்ச்சி செய்வோர்க்கு ஆதரவளித்து, வைத்தியர்கள், சட்டத்தரணிகள் முதலானவர்களுக்கு வாசிக்கும் வசதி செய்து, யாழ்ப்பாணம் முழுவதுக்குமேயன்றி ஏனைய பிரதேசங்களுக்கும் பெரும் பயனளித்தல் வேண்டும் என்று விண்ணப்பித்து வேண்டுகோள் விடுத்தார்.

கிராமங்கள் தோறும் ஒளி விளக்குகளாக வாசிகசாலைகள் உருவாக வேண்டும் என்றும், யாழ்ப்பாணத்தில் மத்திய இலவச வாசிகசாலை நாயகமாக நிலவ வேண்டும் என்றும் கருதினார். தாம் மேற்கொண்ட பணிக்கு நிதியுதவி செய்வோர் தங்கள் பணம் எவ்வாறு பயன்படுத்தப் பெறுகின்றது முதலான அலுவல்களைப் பத்திரிகைகளில் பரக்கக் காணலாம் என்றும், விரும்பியோர் அலுவலகத்தில் வந்தும் பார்க்கலாம் என்றும் விளக்கினார்.

இங்ஙனம் விண்ணப்பித்த செல்லப்பா அவர்கள் யாழ்ப்பாண மத்திய இலவச தமிழ் நூற்கழகம் சம்பந்தமாக விடுத்த விளம்பரத்தின் வண்ணம் 1934ம் ஆண்டு ஆனி ஒன்பதாம் திகதி சனிக்கிழமை பிற்பகல் மூன்று மணிக்கு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மண்டபத்தில் யாழ்ப்பாண மக்களின் பகிரங்கக் கூட்டம் ஒன்றைக் கூட்டினார். பிரமுகர்கள் கூடினார்கள்.

(தொடரும்)

### விளையாட்டு உபகரணம் அன்பளிப்பு

[மன்னார்]

பேசாலை கிராம அபிவிருத்திச் சங்கம், சனசமூக நிலையம் ஆகியவற்றின் சார்பில் 2-வது விளையாட்டு உபகரணங்களை பேசாலை கிராமோதய சபை தலைவர் திரு. அல்பிரட் குலாஸ், பேசாலை செள். பீற்றேஸ் விளையாட்டுக் கழகத்திற்[illegible] அன்பளிப்பாக வழங்கினார். இதேபோல் பேசாலைப் பகுதியிலுள்ள ஏனைய விளையாட்டுக் கழகங்களுக்கும் பல விளையாட்டு உபகரணங்களை அன்பளிப்பாக வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### புதிய குருவாக திருநிலைப்படுத்தப்படுவார்

[கரவெட்டி]

யாழ். நகரைச் சேர்ந்த அருட். செல்வன் அ பேட் யாகராஜா, அருட்செல்வன் ஜெருபல் திருபாகரன் ஆகியோர் அடுத்த மாதம் 2-ம் திகதி புதிய குருவாகத் திருநிலைப்படுத்தப்படவுள்ளார்கள். இத்திருநிலைப்படுத்தல் வைபவத்தை யாழ் ஆயர் அதி. வந். வ தியோகுப்பிள்ளை ஆண்டகையாழ் கொஞ்சேஞ்சி மாதா ஆலயத்தில் வைத்து நிறைவெற்றி வைப்பார்.

### கூட்டம்

[யாழ்ப்பாணம்]

நேர்மையான' சுதந்திரமான தேர்தல்கள் எனும் தலைப்பில் இலங்கை குடியுரிமை இயக்கம் எதிர்வரும் வியாழக்கிழமை கொழும்பு வை. எம். சீ. ஏ. மண்டபத்தில் கூட்டமொன்றை நடாத்தவுள்ளனர்

அதிவண லக்ஷ்மன் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் சட்டத்தரணி எஸ். நடேசன் கியூ சி, வண பிதா திஸ்ஸ பாலசூரியா, கலாநிதி நீலன் திருச்செல்வம், சட்டத்தரணி ஏச். எல். டி. சில்வா கியூ சி ஆகியோர் உரையாற்றவுள்ளனர்.

(சி)

# "உன்மகனைச் சுட்டதுபோல் கணவனையும் சுடுவேன்என்றார்"

## அல்லாரை கொலைவழக்கில் இறந்தவரின் மகள் சாட்சியம்

(சாவகச்சேரி)

"சம்பவதினம் 3, 3½ மணி வரையில் நான் அம்மா வீட்டு முற்றத்திலேயுள்ள மாமரத்தின் கீழ் இருந்து கதைத்துக் கொண்டிருந்தேன். அப்பொழுது தெருவால் இரண்டு சைக்கிள்களில், முதலாவது சைக்கிளில் எதிரிகளும் இரண்டாவது சைக்கிளில் சின்னத்தம்பி, சின்னவி என்பவர்களும் சென்றார்கள் 1-ம் எதிரி, அடியே உன் மகனைச் சுட்டதுபோல் உனது கணவனையும் தொலைத்துக் கட்டுவோம்' என்றார்.

அல்லாரை கொலை வழக்கில் சாட்சியமளிக்கையில் காலமானவரின் மகள் பசுபதி நேசமலர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்

இவ்வழக்கு சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி எம்.எச்.காரியப்பர் முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக்கொள்ளப்பட்டது.

1981ம் ஆண்டு ஏப்ரல் 28ல் அல்லாரையைச்சேர்ந்த வல்லி சுப்பன் என்பவரை அவரது உறவினரான சின்னவன் பூபாலசிங்கம் அல்லது இராசதுரை, சின்னவன் சந்திரன் ஆகியோர் பாளைக் கத்தியால் வெட்டிக் கொலை செய்ததாக இவ்வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணி ஆர். ஈ. தம்பிரத்தினமு சட்டத்தரணி செ. அம்பிகைபாலனும் இறந்தவர்சார்பில் சட்டத்தரணி சி. பாலக்கிருஷ்ணர் சார்ஜன்ட் செல்லையாவின் நெறிப்படுத்தலோடும் ஆஜராகினர்.

தொடர்ந்து பசுபதி நேசமலர் சாட்சியமளிக்கையில் குறிப்பிட்டதாவது:-

"1ம் எதிரி கூறியதை நான் அவ்வளவு கவனத்திற்கெடுக்கவில்லை. ஏனெனில் அவர்கள் அடிக்கடி இப்படிப் பேசுபவர்கள். சற்று நேரத்தில் எனது தகப்பனார் நித்திரையினின்றும் எழுந்து சீவப் போய்விட்டார். இரவு 8, 8½ மணியளவில் நான் வீட்டிலிருக்கும் போது முத்தர் மகன் இரத்தினமும் செல்லையா என்பவரும் வந்து எனது தகப்பனாரைக் கார்த்திகேசு வீட்டில் வெட்டிப்போட்டிருக்கு என்றார்கள். அம்மாவும் இதைப்பற்றி அவர்கள் சொன்னதாகக் கூறினார். நாங்கள் இருவரும் போனபோது வெட்டுக்காயங்களுடன் இரத்தம் வடிந்தநிலையில் தகப்பனார் கிடந்தார்

"எதிரிகளோடு நாங்கள் பேச்சுவார்த்தையில்லை. ஒரு மாதத்திற்கு முன் 1ம் எதிரிக்கும் எனது சகோதரிக்கும் இடையே நடந்த பலாத்காரச் சம்பவம் தொடர்பாகப் பொலிசுக்குக் கூறி விசாரணையும் நடந்தது. எனது வாக்கு மூலமும் பொலிசார் பதிந்துள்ளார்கள்" என்றார்.

1ம் எதிரி சார்பில் ஆஜராகிய சட்டத்தரணி தம்பிரத்தினம் சாட்சியைக் குறுக்குவிசாரணை செய்கையில், மரண விசாரணை நடந்தபொழுது தானும் அங்கே நின்றதாகக் குறிப்பிட்டார். இச்சம்பவம் பற்றி யாருக்கும் ஏதாவது தெரிந்தால் யாரும் சாட்சியம் கூறலாம் என நீதிபதி கூறியும் மரணவிசாரணையில் சாட்சியமளிக்கத் தவறியதை ஒப்புக்கொண்டார். மரண விசாரணை நடந்தபின் மறுநாள் பொலிசாருக்குத்தான் முறைப்பாடு கொடுத்ததாகவும் கூறினார்.

## மாமாங்கேஸ்வரர் தீர்த்தம்

[மட்டக்களப்பு]

வரலாற்றுப் பெருமை மிக்க மட்டக்களப்பு ஸ்ரீ மாமாங்கேஸ்வரர் ஆலய வருடாந்த உற்சவம் கடந்த 11ந் திகதி கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகியது. தீர்த்தோற்சவத் திருவிழா ஆடிஅமாவசை தினமான இன்று நடைபெறும்.

## பாரதி நூற்றாண்டு விழா

[மன்னார்]

மன்னார் மாவட்ட இளம் பட்டதாரிகள் சங்கத்தினால் நடத்தப்படும் பாரதி நூற்றாண்டு விழா எதிர்வரும் அக்டோபர் மாதம் நடைபெறவுள்ளது. இவ் விழாவையொட்டி பாடசாலைகளுக்கிடையிலான இயல், இசை, நாடகப்போட்டிகள் இடம்பெறவுள்ளன.

## யாழ் ஆயர்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

போராட்டங்களை நடத்தி வந்துள்ளனர் என்பதை நாமனைவரும் அறிவோம். இவை அனைத்திலும் வெற்றி பெறுவதற்கு தனது வல்லமையாலும் – சொல்வன்மையாலும்–செயற்திறத்தாலும் மதிப்பிற்குரிய நல்லூர்த் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு. மு. சிவசிதம்பரம் உழைத்தார் என்பதை எவரும் மறுப்பதற்கில்லை தமிழினத்தை மேலும் ஒன்றுபடுத்திச் சிறந்த முறையில் வழிநடத்திச் செல்ல அன்னாரின் 59வது பிறந்த தினத்தில் நல்வாழ்த்துக்கள் கூறுவதுடன் எல்லாமவல்ல இறைவனின் ஆசியுரையும் வேண்டி நிற்கின்றேன்.

## ரூ. 30 லட்சம்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

டபத்தில் நடைபெற்ற தமிழாராய்ச்சி மகாநாட்டின் பின் அத்தனை பெரிய மக்கள் வெள்ளத்தை நேற்றுத்தான் சுவர்ணமுகியின் நடத்தின போது வீரசிங்கம் மண்டபத்தில் காணக்கூடியதாயிருந்தது.

(அ)

## தன்னடக்கம்....

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

றார். சரவெட்டி விக்னேஸ்வரக்கல்லூரியில் கற்கும் காலத்தில் உயர்வகுப்பு மாணவர்களால்நடாத்தப்பட்ட போலிப் பாராளுமன்றத்தில் பிரதம மந்திரியாகவும், எதிர்க்கட்சித் தலைவராகவும், ஏன் பின்வரிசை அங்கத்தவராகவும் அமர்ந்திருந்தனர். அன்று அவர் பெற்ற பயிற்சியியே இன்று அவர் பாராளுமன்ற உறுப்பினராகவும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவராகவும் விளங்குவதற்கு வழிகோலியதெனலாம். பாராளுமன்றத்தில் சிவசிதம்பரம் ஆற்றிய கன்னியுரையே, இவருக்குப் பெரும் புகழைக்கொடுத்தது. 1960-ம் ஆண்டு மார்ச் மாதத் தேர்தலில் உடுப்பிட்டித் தொகுதிப் பிரதிநிதியாக ஜனப்பிரதிநிதிகள் சபைக்குச் சென்ற சிவசிதம்பரம், தமது கன்னியுரையை ஆற்றிக்கொண்டிருக்கையில், எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர் இடைமறித்து, 'நாம் ஒரு கோப்பையில் விருந்துண்ண விரும்புகின்றோம். ஆனால் நண்பர் சிவசிதம்பரம், சோப்பையைக் கூறுபோடவல்லவா விரும்புகின்றார்' எனக் கூறிக்கொண்டார். இதைக்கேட்ட சிவசிதம்பரம், சற்றும் தாமதியாது தமது சிம்மக்குரலில், 'நண்பர் நமக்கு வைக்கும் விருந்து. நரி தட்டக்கோப்பையில் கொக்குக்கு வைக்கும் விருந்தாகும்' என விடை பகர்ந்தபோது சபையே அதிர்ந்தது.

தலைவர்களின் வரலாறே நாட்டின் வரலாறாகும். பதவிகளைத் தேடிப்பலரும் ஓடுவதுண்டு. ஆனால் அரசியல் துறையில் தலைமைப் பதவி தானாக வந்தடைந்த தன்னடக்கம் மிக்கத் தலைவராகத் திரு மு. சிவசிதம்பரம் விளங்குகின்றார். தலைவர்கள் தலைவர்களாகப் பிறக்கின்றார்களேயன்றி உருவாக்கப்படுவதில்லை என்ற சிந்தனைச் சிற்பிகள் சொன்ன இலக்கணத்திற்கு இலக்கியமே சிவசிதம்பரம் எனலாம். இராஜகளை பொருந்திய கம்பீரமான தோற்றமும், ஈடிணையற்ற ஆளுமையும், இடையீடற்ற இறைவணக்க ஈடுபாடும் எவரிடத்தும் அன்போடு பழகும் சுபாவமும் கருத்து மாறுபாடு கொண்டவர்களும் கனிவோடு 'சிவா' என்று அழைக்கும் படியான வாழ்வும்; எல்லாவற்றிற்கும் மேலாக அறிமுகப்படாமலேயே எவரும் எளிதாக இனங்கண்டு கொள்ளக்கூடிய ஆஜானுபாகுவான தோற்றமும் கொண்ட சிவசிதம்பரம் 15-7-1978 ல் வவுனியாவில் நடைபெற்ற மாநாட்டில், தமிழர் விடுதலை கூட்டணியின் தலைவராக ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டார்.

கல்லூரிகளில் கல்விகற்ற காலம் தொடக்கம் சொற்போர் என்பது சிவசிதம்பரத்திற்குப் பிடித்தமான ஒரு பொழுது போக்காகும் சட்டக்கல்லூரியின் இறுதி வருடத்தில் நடைபெற்ற பேச்சுப் போட்டியில் முதலிடம் பெற்று அதற்குரிய தங்கப் பதக்கத்தையும் தட்டிக் கொண்டார். கரவெட்டியில் உள்ள இல்லத்தில் சிவசிதம்பரத்தைச் சந்தித்த ஜேர்மனியப் பேராசிரியர் ஒருவர் லிங்கன்ஸ் இனைச் சேர்ந்தவர்களைப் போன்று அழகான ஆங்கிலம் பேசும் எளிய ஒரு மனிதனை அவரது தாழ்மையான குடிசையில் சந்தித்தேன் எனக் கூறியமை ஈண்டு குறிப்பிடத்தக்கதாகும்.

## இப்படியும் நடக்கிறது

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற யாழ். சௌக்கிய சேவை கூட்டுறவு சிக்கன சேமிப்புக் கடன் நிவர்த்திச்சங்க வெள்ளி விழாவில் கலந்து கொண்ட எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் —

"சிக்கனத்தையும் சேமிப்பையும் கடைப்பிடிக்கத் திடசங்கல்பம் பூண்டுள்ளேன்......" என்று கூறியபோது—

பலர், விஷயம் புரியாமல் திகைத்தார்கள்!

'தலைவருக்கு என்ன புதிதாக சிக்கனம், சேமிப்பு யோசனை வந்திருக்கிறது...' என்று 'குசுகுசு'க்கத் தொடங்கினர்.

"சிக்கனம்... சேமிப்பு என்றால், நேரத்தைச் சிக்கனமாகவும்; சக்தியை சேமிப்பாகவும் கடைப்பிடிக்கப் போகின்றேன்..." என்று 'அமிர்' விளக்கியதும், சபையில் 'கொல்' என்று சிரிப்பொலி எழுந்தது!

'ஊடுருவி'

## இன்று

யாழ்ப்பாணம்)

வண்ணை வைத்தீஸ்வர சுவாமி கோவில் அம்பாள் திருவிழா 6ம் நாளான இன்று மாலை 5-30மணிக்குபிரசங்கம்.

6-30 மணிக்கு வசந்த மண்டப பூசை, 7-30 மணிக்கு புஷ்பப் பல்லக்கில் அம்பாள் வீதி வலம் வருவார்.

### மலர் வெளியீடு

காரைநகர் மருதடி வீரகத்தி விநாயகர் ஆலய மண்டலாபிஷேக 38ம் நாளான இன்று செவ்வாய்க் கிழமை காலை 'விநாயகர் வணக்க மலர்' வெளியிட்டு வைக்கப்படும். ஆலய தர்மகர்த்தாசபைத்தலைவர் சட்டத்தரணி த. சோமசுந்தரம் தலைமையில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அதிபர் திரு. க. அருணாசலம் மலரை வெளியிட்டு வைப்பார்.

### விஷேஷ பூசை

(புங்குடுதீவு)

புங்குடுதீவு அர்ச் அந்தோனியார் ஆலயத்தில் இன்று செவ்வாய்க்கிழமை விசேஷ பூசை நடைபெறுகிறது.

மாலை 6-00 மணிக்கு வீரமாமுனிவர் கலை அரங்கில் தமிழ்நாடு தவத்திரு நாதன் ஸி. எஸ். ஸி. அடிகளாரின் சிறப்புச் சொற்பொழிவு இடம்பெறும். தொடர்ந்து உள்ளூர்க் கலைஞர்கள், அறிஞர்கள் கலந்துரையாடலும் 'ஞான ஒளி' நாடகமும் இடம்பெறும். (அ)

### தென்புலோலியில்

(புலோலி)

தென்புலோலி அறிவகம் சனசமூக நிலையத்தின் 27-வது ஆண்டு நிறைவுவிழாவும் விளையாட்டுப் போட்டியும் இன்று முருகையா கோவிலடி மைதானத்தில் நிலையத் தலைவர் திரு. ப. குணநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

## சேபால பிணை....

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இடைநிறுத்தம் செய்தது.

இம்மாதம் 27ம் திகதி வாதப்பிரதிவாதங்களுக்கு இடம் அளிக்கப்படும் என்று மேன்முறையீட்டு நீதிமன்றம் தெரிவித்தது. சேபாலவோ அல்லது அவரது சட்டத்தரணிகளோ நீதிமன்றத்துக்கு சமூகமளித்திருக்கவில்லை.

## ஹைதராபாத்தில் 3 தினங்கள் பிறந்ததினவிழா



(யாழ்ப்பாணம்)

பகவான் ஸ்ரீபால சிவயோகேந்திர விஸ்வசாந்திதேஜ்ஜின் பிறந்தநாள்விழா இம்மாதம் 25ம், 26ம், 27ம் திகதிகளில் ஹைதராபாத்தில் கொண்டாடப்படவிருக்கிறது.

மனத்தை ஒரு நிலைப்படுத்தி அடக்கி ஆளும் வல்லமைபெற்றவர்களால் ஐம்புலன்களையும் அடக்கி ஆள முடியும் என்ற தத்துவத்தை உலகிற்கு உணர்த்திவரும் யோகியார் உடற்பிணியைப் போக்கும் வைத்தியநாதனாகவும் உளப்பிணியைப் போக்கும் அற்புத புருஷராகவும் திகழ்கிறார்.

அண்மையில் கொழும்பில் நடைபெற்ற உலக இந்து மாநாட்டில் கலந்து கொள்வதற்கு வருகை தந்திருந்த யோகியார் பல அற்புதங்களை நிகழ்த்தி அதிசயிக்க வைத்தவர்.

சுவாமிகளது அழைப்பை ஏற்று ஸ்ரீபாலசிவ சர்வதேச சமாதான ஸ்தாபன யாழ்ப்பாணக்கிளைச் செயலாளர்திரு. எஸ். ஐ. தனபாலசிங்கம் தலைமையிலான குழு ஒன்று இவ் விழாவில் பங்குகொள்ள ஹைதராபாத்திற்குப் பயணமாகவுள்ளது. திரு. தனபாலசிங்கம் அண்மையில் 'பகவான் பாலசிவயோகேந்திர மகராஜ்ஜின் வாழ்க்கைச்சுருக்கமும் அற்புதங்களும்' எனும் நூலை இலவசமாக வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.


## ஐஸ்கிறீம் பிரியர்களே!

வெளிநாட்டில் நீங்கள் அருந்திய ஐஸ்கிறீம் வகைகளை இனி உங்கள் நாட்டில் அருந்தி மகிழலாம்.

நல்லை நகரில்

**Blakes - 7 கிறீம் ஸ்பொட்**

**பாலமுருகன் ரேடர்ஸ்**

246 நல்லூர், யாழ்ப்பாணம்.

தேர் முட்டி முன்பாக)

3926


## மரண அறிவித்தல்

### பண்டிதர் சி. கதிரிப்பிள்ளை

தெல்லிப்பளை மேற்கு, விழிசிட்டி முன்னைநாள் தலைமையாசிரியர் பண்டிதர் திரு. சி. கதிரிப்பிள்ளை அவர்கள் சிவபதம் அடைந்துவிட்டார்கள். ஈமக்கிரியை இன்று82-07-20 செவ்வாய்க்கிழமை காலை 8-00மணிக்கு ஆரம்பமாகும். உற்றார் உறவினர் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்,

3932

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 66-ம் இலக்க அச்சகத்தில் 1982 ஆம் ஜூலை மீ 20-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number Q.B. 100236/81
Eelanadu—P. O. Box 49, Tleegram: 'Eelanadu' T'phone 389 and 8126.